OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள்
பொர்க்க செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பேர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 29 ஞாயிற்றுக்கிழமை (13 03 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 106

# கிழக்கில் விரைவில் சர்வசன வாக்கெடுப்பு
# ஜனாதிபதி விஜேதுங்கா தெற்கில் அறிவிப்பு

## அகதிகளை மீளக்குடியமர்த்த துரித நடவடிக்கைக்கு உத்தரவு

கொழும்பு, மார்ச் 13

வடக்கு - கிழக்கு இணைப்பைத் தொடர்வதா அல்லது இரண்டையும் தனித்தனியாகப் பிரிப்பதா என்பது சம்பந்தமாக கிழக்குப் பிரதேசத்தில் வாழும் மக்களின் கருத்தை அறியும் பொருட்டு—

மிக விரைவில் அங்கு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும்,

ஜனாதிபதி டி. பி, விஜேதுங்கா தென் மாகாணத்தில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசும்போது இதனை அறிவித்ததாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது,

கிழக்கை வடக்கிலிருந்து பிரிக்கவே அரசாங்கம் விரும்புகிறது வடக்கில் மட்டும் காணப்படும் பயங்கரவாதத்தை அடக்குவதற்கு அதுவே சுலபமாக இருக்கும் வடக்கில் பயங்கரவாதத்தை ஒழிக்கவேண்டுமானால், அதற்கு முன்னர் கிழக்கை வடக்கில் இருந்து பிரித்துவிட வேண்டும்— என்று ஜனாதிபதி தமது பேச்சில் குறிப்பிட்டதாக இந்திய வானொலி மேலும் தெரிவித்தது.

ஜனாதிபதியின் இது போன்ற அறிவிப்புகளால் தமிழர்கள் கவலை அடைந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன—

இதேவேளை, சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதற்கு ஏற்ற வகையில் கிழக்கில் அகதிகளை மீளக் குடியேற்றும் வேலைகளை துரிதப்படுத்துமாறு புனர்வாழ்வுத் துறை அமைச்சை அரசாங்கம் பணித்திருக்கிறது — என்றும் இந்திய வானொலி தனது செய்தியில் குறிப்பிட்டது.

வடக்கு - கிழக்கு இணைப்புச் சம்பந்தமான வாக்கெடுப்புக்கு முன்கோடியாகவே கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப் படுவதாக அவதானிகள் கருத்துக் கூறி வந்தது தெரிந்ததே.

கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த கையோடு

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குக்கு தேவையான மா ஹெந்தல கப்பல் மூலம்
### தொடர்ந்து சேவையில் ஈடுபடும்

யாழ்ப்பாணம், மார்ச் 13

குடாநாட்டுக்குத் தேவையான மாவை எடுத்துவரும் பணியில் ''ஹெந்தல'' கப்பல் தொடர்ந்து ஈடுபடும்.

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் இத் தகவலைத் தெரிவித்தார்.

குடாநாட்டில் மாவுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்து திருமலையில் இருந்து 'ஹெந்தல' கப்பல் மூலம் மா எடுத்து வரப்பட்டது தெரிந்ததே.

குடாநாட்டில் தட்டுப்பாடு ஏற்படாத விதத்தில் மாவை இங்கு எடுத்துவர வசதியாக மாதாந்தம் தேவைப்படும் மாவின் அளவு, அவற்றைக் கப்பல் மூலம் இங்கு எடுத்து வர வேண்டிய கால அட்டவணை போன்ற விவரங்களை யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் திரு செ. பத்மநாதன் அத்தியாவசிய சேவைகள் பிரிவினரிடம் கையளித்துள்ளார்.

(இ-5)

குடாநாட்டுக்கு வரும் பொருள்களுக்கு

## கப்பல் கட்டணம் அறவிடும் 'முடிவை' அரசு கைவிட்டது

யாழ்ப்பாணம், மார்ச். 13

வடக்கே கப்பல் மூலம் எடுத்துவரப்படும்— நிவாரணப் பொருள்கள் தவிர்ந்த— ஏனைய பொருள்களுக்கு கப்பல் கட்டணம் அறவிடுவது என்ற முடிவை கைவிட அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு சென்றிருந்த யாழ் செயலக திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் இது விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் பேச்சு நடத்தியிருந்தார்.

கப்பல் கட்டணத்தை அறவிடுவதன் மூலம் அத்தியாவசிய பொருள்கள் மீது ஏற்படும் விலை அதிகரிப்பு குடாநாட்டு மக்களுக்கு மேலும் சுமையாக அமையும் என்று திட்டப் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியிருந்தார்.

அதனை அடுத்தே கப்பல்களுக்கு கட்டணம் அறவிடுவதை நிரந்தரமாக நிறுத்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல்களுக்கு கட்டணம் அறவிடுவதை தற்காலிகமாக நிறுத்தி இருப்பதாக யாழ் அரச அதிபருக்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்ததே.

குடா நாட்டுக்குக் கப்பலில் கொண்டுவரப்படும் பொருள்களுக்கு அரச அதிபரே கப்பல் கட்டணம் செலுத்த வேண்டும் என்று கடந்த மாதம் 17 ஆம் திகதி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பணித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஆ-5)

தென் மாகாணத்தில்

## ஆயுதம் தரித்த பொலிஸாரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்

கொழும்பு, மார்ச் 13

தென் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களைக் காவல் புரியும் ஆயுதந்தரித்த பொலிஸாரின் எண்ணிக்கையை அதிகரிப்பது என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தீர்மானித்துள்ளார்.

இந்த முடிவுக்கு இணங்க இம்மாதம் 24 ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தலின் போது, ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் நான்கு ஆயுதந் தரித்த பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

காலி மாவட்டத்தில் 512 வாக்களிப்பு நிலையங்களும் மாத்தறை மாவட்டத்தில் 400 வாக்களிப்பு நிலையங்களும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 343 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

[இ-எ-6]

### மோசடி நடந்தால் பொலிஸாரே பொறுப்பு

கொழும்பு, மார்ச் 13

தென்மாகாணசபைத் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களில் மோசடிகள் இடம்பெற்றால் இந் நிலையங்களைக் காவல் புரியும் ஆயுதந்தரித்த பொலிஸாரே அவற்றுக்குப் பொறுப்பாவார்கள் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா, பொலிஸ் மா அதிபர் பிராங்க் டி சில்வா மற்றும் உயர்நிலை அதிகாரிகள் கலந்து கொண்ட மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வேட்பாளர்கள், தேர்தல் அதிகாரிகள் மற்றும் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் பொதுச் செயலாளர்கள் மட்டுமே வாக்களிப்பு நிலையங்களுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் —

ஆயுதந்தரித்த அரசியல்வாதிகளோ, அவர்களின் பாதுகாப்பு அதிகாரிகளோ வாக்களிப்பு நிலையங்களுக்குள் பிரவேசிப்பதைப் பூரணமாக தடைசெய்வது என்றும் இம் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவுகளை மீறி வாக்களிப்பு நிலையங்களுக்குள் மோசடிச் செயல்கள் இடம்பெற்றால், அவற்றிற்கு அவ் வாக்களிப்பு நிலையங்களைக் காவல் புரியும் ஆயுதந்தரித்த பொலிஸாரே பொறுப்பாக்கப்படுவார்கள் என்றும் பொலிஸ் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### ருகுணு வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 13

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உட்பட 900 மெற்றிக் தொன் பொருள்களுடன் 'ருகுணு' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறையை வந்தடைந்தது.

வர்த்தகத் திணைக்களத்துக்கான 450 மெற்றிக் தொன் அரிசி, 100 மெற்றிக் தொன் சீனி, 40 மெற்றிக் தொன் பருப்பு மற்றும் 70 மெற்றிக் தொன் பால்மா வகைகள் என்பனவும் அந்தக் கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன.

(இ-5-15-17-[illegible])

## பெற்றோரிடம் வாடகை அறவிடப்பட மாட்டாது

பிள்ளைகளின் வீடுகளில் வதியும்

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடபகுதிக்கு வெளியே செல்வோரின் வீடுகளையும், வீட்டுச் சொத்துக்களையும் பயன்படுத்து வீட்டு உரிமையாளர்களின் பெற்றோர்கள் அந்தச் சொத்துக்களை தகுந்த காரணத்தோடு பயன்படுத்துவார்களாயின் அவர்களிடமிருந்து வாடகைப் பணம் அறவிடப்படமாட்டாது.

வடபகுதிக்கு வெளியே செல்வோரின் சொத்துக்கள் கண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## டி. பி. பேசிய கூட்டத்தில் 300 முதல் 400 பேர் மட்டும்

கொழும்பு, மார்ச் 13

காலி மாவட்டம் அம்பலாந்தோட்டையில் பட்டபொல என்னுமிடத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதி விஜேதுங்கா கலந்து கொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்கு 300 முதல் 400 பேர் வரையே வந்திருந்தனர் என்றும் —

மக்களைத் திரட்டுவதற்கு இசைக்குழுக்களை ஆளும் கட்சியினர் கொண்டு போய் இருந்தும் மக்கள் ஜனாதிபதியின் கூட்டத்தில் கலந்து கொள்ளாதது ஆளும் கட்சியின் பலவீனத்தையே எடுத்துக் காட்டுவதாகவும் ராவய ஆசிரியர் விக்ரர் ஐவன் பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

பிரேமதாஸாவின் மறைவுக்குப் பின்னர் விஜேதுங்க அரசாங்கத்துக்கு சிங்களவர் மத்தியில் உள்ள செல்வாக்கைப் பரீட்சிக்கும் முதலாவது வாய்ப்பை தென் மாகாண சபைத் தேர்தல் வழங்கியுள்ளது என்றும் ராவய ஆசிரியர் தெரிவித்தார்.

[இ-எ-6)

## காஷ்மீர் முன்னணி தலைவர் கைது

புதுடில்லி, மார்ச் 13

ஜம்மு — காஷ்மீரில் தனிநாடு கோரி போராடி வரும் ஜம்மு — காஷ்மீர் புரட்சி முன்னணியின் தலைவர் ஜாவட்மீர் நேற்று ஸ்ரீநகரில் வைத்து இந்திய எல்லைப் புறப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

(இ எ-6)

# பருத்தித்துறைக் கடலில் தாக்குதல்
# மீனவர் படகுடன் எரிந்து மரணம்

### மற்றும் ஒருவர் காயம்

வடமராட்சி, மார்ச். 13

கடற்படையினரின் தாக்குதலின் போது மீனவர் ஒருவர் படகுடன் எரிந்து உயிரிழந்தார் மற்றும் ஒருவர் எரிகாயங்களுக்கு உள்ளானார்.

பருத்தித்துறை முனை, கோட்டடிக் கடற்பிராந்தியத்தில் நேற்றுக் காலை 7 மணி அளவில் இச் சம்பவம் இடம் பெற்றது.

இச்சம்பவத்தின் போது ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வலைகள், மீன் பிடி உபகரணங்கள் உட்பட, இயந்திரத்துடன் சேர்ந்து படகும் முற்றாக எரிந்து சாம்பராகியது.

இச்சம்பவத்தில் பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் வாழ்ந்த மோரிஸ் பிரான்ஸிஸ் (தவம் — வயது 38) என்ற எட்டுப் பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இவர் இதற்கு முன்பும் மூன்று தடவைகள் இக்கடற்பிராந்தியத்தில் கடற்படையினரிடம் சிக்கி உயிர் தப்பியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

தேவசகாயம் தேவதிரவியம் (செல்வராசா — வயது 28) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே எரிகாயங்களுக்குள்ளானவராவார்.

காயமடைந்தவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

[இ-173-15]

### படகு தீப்பிடித்தபோது கடலுக்குள் குதித்தேன்
#### தப்பியவர் தகவல்

வடமராட்சி, மார்ச். 13

கடற்படையினர் எமது படகுக்குச் சமீபமாக வந்து ஏதோ ஒரு வகை வெள்ளைத் தூளைப் படகுக்குள் வீசிய பின்னர் படகை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். படகு உடனடியாகத் தீப்பிடித்துக்கொண்டது. எரிகாயங்களுக்கு உள்ளான நான் படகில் இருந்து கடலில் குதித்தேன்.

நேற்றுக்காலை பருத்தித்துறை கடற்பகுதியில் இடம் பெற்ற கடற்படைத் தாக்குதலில் காயம் அடைந்த தேவதிரவியம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:-

(6 ஆம் பக்கம் பார்க்க)

### 9,500 மாணவர் அனுமதி

கொழும்பு, மார்ச் 13

பல்கலைக் கழகங்களுக்கு புதிய கல்வி ஆண்டில் சுமார் 9 ஆயிரத்து 500 மாணவர் அனுமதிக்கப் படவிருப்பதாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அறிவித்திருக்கிறது

(இ-எ-6)

### மச்சந்தி முரளி



உள்ளூராட்சித் தேர்தல் போல இதுவும் ... செய்யலாம் என்று ...

## அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி முயற்சிக்கு மறுப்பு

சென்னை, மார்ச் 13

அ. தி. மு. க. இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்துக் கொள்ளாது எனவும் —

தாம் இது தொடர்பாக காங்கிரஸ் கட்சித் தலைவர்களை ஒருபோதும் அணுகவில்லை எனவும் —

அ. தி. மு. க.வின் துணைப் பொதுச் செயலர் திரு எஸ். டி. சோமசுந்தரம் நேற்று சென்னையில் கூறினார்.

முதல் அமைச்சர் செல்வி ஜெயலலிதா அண்மையில் டில்லி விஜயத்தின் போது காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேர்வது பற்றி அதன் தலைவர்களுடன் பேசிக் கொள்ளவில்லை எனவும் அவர் கூறினார்.

(க)

## காவலில் இருந்த 3 இலங்கையர் தப்பினர்

திருச்சிக்கு அருகில் உள்ள துறையூர் என்ற இடத்தில் உள்ள துணைச் சிறைச்சாலையில் தனிமுகாம் ஒன்றில் இருந்து இலங்கையைச் சேர்ந்த 3 பேர் நேற்று முன்தினம் இரவு தப்பினர்.

பாஸ்போட் இன்றி தமிழ் இந்தியாவில் சில குற்றங்களைச் செய்த குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்றும் —

இவர்களைத் தேடும் பணி தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஹெலி தாக்கு

அச்சுவேலி, மார்ச் 13

வெள்ளி இரவு ஹெலி ஒன்று அச்சுவேலி பத்தமேனி, கதிரிப்பாய், இடைக்காடு பகுதிகளை வட்டமிட்டு 50 கலிபர் தாக்குதலை நடத்தியது.

(இ-11)

### வாகனங்கள் மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு, மார்ச் 13

தென் மாகாணசபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனாவுக்குச் சொந்தமான இரு வாகனங்கள் மீது நேற்று முன்தினம் இரவு பதினொரு மணியளவில் இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இரு வாகனங்களும் சேதமடைந்தன என்றும் மாத்தறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

(இ-6)

## சித்திரவதைக்கு உள்ளானோர் நஷ்டஈடு பெற லண்டனில் நிறுவனம்

லண்டன், மார்ச் 13

கடந்த திங்கட்கிழமை லண்டனில் புதிய சர்வதேச நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அதன் பெயர் ஆங்கிலத்தில் Redress ஆகும்.

உலகில் எந்த நாட்டிலும் சித்திரவதைக்குள்ளானவர்களுக்கு நட்டஈடு பெற்றுக் கொடுப்பதற்கு சட்டரீதியாக இந்நிறுவனம் செயற்படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

(இ-எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 25 – 09 – 1941

மறைவு 11 – 02 – 1994

### குமாரசாமி செல்வச்சந்திரன்
(நெப்போலியன்)
B. A. (இலங்கை)

கனடாவில் உயிர் நீத்த குமாரசாமி செல்வச்சந்திரன் (நெப்போலியன்) B. A. (இலங்கை) அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் கொழும்பிலுள்ள 10, கொத்தலாவல டெறஸ், அசோகா கார்டின், பம்பலப்பிட்டியிலுள்ள இல்லத்தில் இன்று (13-03-94) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

அதேதினம் ஊறணி, வல்வெட்டித்துறையிலுள்ள அவரது இல்லத்திலும் நினைவு கூரல் வைபவம் நடைபெறும்.

மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்.

ஊறணி,
வல்வெட்டித்துறை [7132]

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 12 10 1978

இறப்பு: 21 02 1993

### சிவசுப்பிரமணியம் அனுராதா
(வாணி)
(யாழ். நெல்லியடி மத்திய மகளிர் கல்லூரி, 10ஆம் ஆண்டு மாணவி)

திதி: 13 – 03 – 1994

ஓராண்டு சென்றதம்மா இனியவளே வாணி அம்மா!
ஈன்றவர்கள் படும் துயரம்
அறியாயோ எம் செல்வமே!
உன் பிறந்தவர்கள் படும் வேதனை தான்
அறியாயோ அம்மா!
உனை வளர்த்தவர் புலம்புவது தான்
தெரியாதோ எம் தங்கமே!
உன் பால் முகமும், முல்லைச் சிரிப்பும்
எம் கண் முன் அலை மோதுதம்மா!
பாரினில் நாமினிமேல்
உனை எங்கு காண்போம் அம்மா!
கொடிய காய்ச்சல் உனை
எம்மிடமிருந்து பிரித்ததம்மா!
எம் மனதில் என்றும் நீங்காது
நிலைத்திருப்பாய் அம்மா!
தங்கமே! வாணி அம்மா!
எம் கண்ணீரை நீ வந்து ஆற்றமாட்டாயோ!

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
அண்ணா, தம்பி, உறவினர்கள்.

சித்தம்பாதி,
கரணவாய். [29784]

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 08 – 11 – 1941

மறைவு: 13 – 03 – 1993

### அருள் திரு. ஆர். துரைராஜா

நானே உயிர்த்தெழுதலும்
ஜீவனுமாயிருக்கிறேன் என்னை
விசுவாசிக்கிறவன் மரித்தாலும்
பிழைப்பான்.

யோவான் 11:25

அன்புடன் நினைவு கூரும்
மனைவி, பிள்ளைகள்,
மாமா, மாமி

''தவமாக்''
உடுவில். (7030)

# மலேரியா தடுப்பு வாரத்தில் பல்வேறு நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 13

எதிர்வரும் மலேரியாத் தடுப்பு வாரத்தில் யாழ். பிரதேச செயலர் பகுதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகள் பற்றி யாழ். பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா அறிவித்துள்ளார்.

அவையாவன

★ எதிர்வரும் 18ஆம் திகதியில் இருந்து 25 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் மலேரியாத் தடுப்புக் குழுவை உருவாக்குதல்.

★ தொண்டர்கள் வீடு வீடாகச்சென்று சிரமதான அடிப்படையில் வீடு, வளவு சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடல். மலேரியா பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துதல்.

★ சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் ஆகிய நிலையங்களில் மலேரியாத் தடுப்பு சம்பந்தமான கலந்துரையாடல்களை நடத்துதல்.

★ பாடசாலைகளில் ஒவ்வொரு நாளும் குறைந்தது 15 நிமிடங்கள் மலேரியாத் தடுப்பு பற்றி தகுதி வாய்ந்தோரைக் கொண்டு சொற்பொழிவாற்றுவித்தல்.

★ மாநகரசபை சுகாதாரப் பிரிவினர் மலேரியாத் தடுப்பு வாரத்தில் விசேட சுகாதாரக் கலந்துரையாடல்களையும் நேரடி மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வர்.

(இ-162)

## ஆசிரிய ஆலோசகர்களாக 6,600பேர் நியமனம் பெறுவர்

கொழும்பு, மார்ச் 12

இருபத்தொரு பாடங்களுக்கு 6ஆயிரத்து 600 ஆசிரிய ஆலோசகர்களைப் புதிதாக நியமிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமயம், விவசாயம், உடற்கல்வி முதலான பாடங்களுக்கே கல்வி ஆலோசகர்கள் நியமிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான எழுத்துப் பரீட்சை அடுத்த மாதம் 23ஆம் திகதி நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[ஜ-எ-6]

## முதல்வர் ஜெயலலிதாவிடமிருந்து சசிகலாவை பிரித்துவிட சுப்பிரமணியசுவாமி சதியாம்

முதலமைச்சர் ஜெயலலிதாவிடமிருந்து தமது மனைவி சசிகலாவைப் பிரிக்க ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி சதி செய்வதாக மாநில முன்னாள் அரச அதிகாரியும் தமிழரசி வாரஇதழ் ஆசிரியருமான எம் நடராஜன் தெரிவித்தார்.

சசிகலாவை ஜெயலலிதாவிடம் இருந்து பிரித்து விட்டால், ஜெயலலிதாவை அரசியலில் இருந்து அகற்றி விடுவது இலகுவாக இருக்கும் என்று டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி அபிப்பிராயப்படுகிறார் என்றும் நடராஜன் செய்தியாளர்களிடம் கூறினார்.

சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர்களை இழிவுபடுத்தும் சுவரொட்டிகள் தனது அச்சகத்தில் அச்சிடப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

அச்சுவரொட்டிகள் தமது அச்சகத்தில் அச்சிடப்பட்டதாக டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கூறியிருப்பது அரசியல் நோக்கம் கொண்டதாகும் என்றும் அவர் தெரிவித்தார். (ஓ எ)

## இந்திராகாந்தி கொலை முயற்சி: கருணாநிதியும் 62 பேரும் வழக்கிலிருந்து விடுதலை

### மேன்முறையீட்டு மனு தள்ளுபடி

சென்னை, மார்ச் 13

1977இல் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியை கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் தி. மு. க. தலைவர் மு கருணாநிதியும் மற்றும் 62 பேரும் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து தமிழக அரசு தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு மனுவை சென்னை உயர்நீதிமன்றம் கடந்த வியாழன் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

திருமதி இந்திரா காந்தி மதுரைக்கு விஜயம் செய்த போது அவர் பயணம் செய்த கார் மீது கல்லெறிந்து அவரைக் கொலை செய்ய முயற்சித்ததாக மு கருணாநிதி உட்பட 118பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கின் ஆரம்ப விசாரணையின் போது வை கோபாலசாமி, ரகுமான்கான் உட்பட 55 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

1987இல் வழக்கு விசாரணை முடிவில் கருணாநிதி உட்பட எஞ்சிய 63 பேரையும் நீதிமன்றம் விடுதலை செய்தது. இதனை ஆட்சேபித்தே தமிழக அரசு அப்பீல் செய்திருந்தது.

(ஓ-எ)

## பாடசாலைகளில்

ஆனைக்கோட்டை றோ. க. த. க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி ச. சோமலிங்கம் தலைமையில் நடைபெறும். (க)

★ ★ ★

இணுவில் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும்.

(க -90)

★ ★ ★

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1 30மணியளவில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக மைதானத்தில் அதிபர் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறும். (க-161)

★ ★ ★

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் இரண்டாவது இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கள் பிற்பகல் 2 மணிக்கு யாழ், இந்துக் கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. மு. செல்லையா தலைமையில் நடைபெறும்.

(த)

★ ★ ★

வயாவிளான் குட்டியப்புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. கி. சிவப்பிரகாசம் தலைமையில் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிகள் இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு திருமதி கோ. [illegible] தலைமையில் நடைபெறும்.

## நாளை

யாழ். மாவட்ட சனசமூக நிலைய சம்மேளன நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையில் நடைபெறும். (த)

★ ★ ★

யாழ்.மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தின் நடமாடும் சேவை நிகழ்வு ஒன்று நாளை திங்கட்கிழமை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆ.வேதநாயகம் தலைமையில் நடைபெறும்.

(க-30)

★ ★ ★

திருநெல்வேலி ''சிறுவர் நிறைவாழ்வு இல்ல'' சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நாளை திங்கட்கிழமை நடைபெறும்.

லயன்ஸ் கழக யாழ் வலயம் ஒன்றின் தலைவர் லயன் எஸ். இராஜேஸ்வரனால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்வில் பிராந்தியத் தலைவர் லயன் எஸ் இராமகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

லயன்ஸ் கழக யாழ்.வலயம் ஒன்றின் செயற் திட்டத்தின் ஒரு பகுதியாக 20 ஆயிரம் ரூபா செலவில் சிறுவர் இல்லத்தில் திருத்த வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கப்படுகிறது. (க)

## இன்று நடப்பவை

வட்டுக்கோட்டைதொலைக் கல்வி நிலையத்தில் பயிற்சி பெறும் இரண்டாம் ஆண்டு ஆசிரிய மாணவர்களுக்கான இரண்டு நாள் தொடர் அமர்வு இன்றும் நாளையும் நடைபெற இருப்பதால்— சகல ஆசிரிய மாணவர்களையும் இன்று ஞாயிறு காலை 8 மணிக்கு மேற்படி நிலையத்தில் சமுகமளிக்கும்படி சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுக்கொண்டுள்ளார். (த)

★ ★ ★

குரும்பசிட்டி சன்மார்க்க சபை, தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நடத்தும் சைவ சமயப் பெருவிழாவின் மணிவிழா நிகழ்ச்சித் தொடர்-4 இன்றும் நாளையும் காலை 8.30 மணி முதல் 1மணி வரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்

(த- 152)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடமாகாண ஆசிரியர் சங்கச் சகாய நிதியின் 34 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (ஓ)

★ ★ ★

தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத்தின் 5 ஆம் ஆண்டு நிறைவின் 'அதியுயர் விருது' சாவகச்சேரி நகரசபை முன்னாள் செயலாளர் த நவரத்தினராசாவுக்கு வழங்கப்படவுள்ளது

விருதுவழங்கும் வைபவம் இன்று 13 ஆம் திகதி காலை 8. 30 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் ஒன்றியத் தலைவர் பிரம்மஸ்ரீ இரா. சத்தியானந்த சர்மா தலைமையில் நடைபெறும்.

(க-117)

★ ★ ★

கரவெட்டிப் பிரிவிற்கான தொலைக்கல்வி பயிற்சி வகுப்புகள் கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியில் இயங்கும் தொலைக்கல்வி மத்திய நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ஆரம்பமாகின்றன (த-55)

★ ★ ★

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மகளிர் குழு நடத்தும் அனைத்துலக பெண்கள் தினவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் மாவட்ட மகளிர் குழுத் தலைவி திருமதி கு. சிவராஜா தலைமையில் நடைபெறும். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும் (த-162)

★ ★ ★

இணுவில் மத்திய கல்லூரி அபிவிருத்தி நிதிக்காக கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையினரின் வள்ளி திருமணம் என்னும் புராண நாடகம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு மேடையேற்றப்படவுள்ளது (க-30)

★ ★ ★

சரசாலை — நுணாவில் ஸ்ரீசிதம்பரவிநாயகர் ஆலய கூட்டுப்பிரார்த்தனைச் சபையும் சரசாலை இந்துமன்றமும் இணைந்து நடத்தும் பேச்சுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணி முதல் யாழ். வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். (க-30)

## புத்தகசாலை உரிமையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 13

வெளிநாட்டு, உள்நாட்டு சஞ்சிகைகள், நாவல்கள் விற்பனை செய்யும் புத்தகசாலை உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 00 மணிக்கு கோண்டாவில், அரசியல் துறை. மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். வர்த்தக சங்கத்திற்கு உட்பட்ட புத்தகசாலை உரிமையாளர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(க)

## ஆலயங்களில்

கழிபுரம்—பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமிகோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் ஆறு தினங்களுக்கு சண்முகப் பெருமானுக்கு இலட்சார்ச்சனை நடைபெறவுள்ளது.

(க-28)

★ ★ ★

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தான மணிக் கோபுரத்தில் புதிய கண்டாமணி இணைக்கும் வைபவம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

(த-51)

## உடற்பயிற்சி போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் வலயம் ஒன்று பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சி இறுதிப் போட்டிகள் இன்று யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகள் இன்றைய இறுதிப் போட்டியில் பங்குபற்றவுள்ளன.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராஜா தலைமையில் இன்று பிற்பகல் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராக கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி கலந்து கொள்வார். (க-5)

## சீமெந்து ஊழியர் சம்பளம்

காங்கேசன் சீமெந்து ஊழியர்களின் ஜனவரி மாதச் சம்பளக் கொடுப்பனவு நாளை திங்கட்கிழமை வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப்படும்.

(க)

# ஏழைகள் - அநாதைகளுக்கு உதவுவது ஆண்டவனுக்குச் செய்யும் சேவையாகும்

## சைவச் சிறுவர் கொடிவார தின வைபவத்தில் அரச அதிபர்

யாழ்ப்பாணம், மார்ச் 12

ஏழைகள் அநாதைகளுக்கு உள்ளன்போடு செய்யும் சேவைகள் ஆண்டவனுக்குச் செய்யும் சேவை ஆகும். எமக்குக் கிடைக்கும் பணத்தில் ஒரு பகுதியை தருமம் மற்றும் அறப்பணிகளுக்குச் செலவிட ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

கைதடி சைவச் சிறுவர் இல்ல கொடிவார நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில், யாழ் அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் இந்து சமயப் பேரவையின் ஆதரவில், கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த கொடிவாரதின நிகழ்வு வைபவத்தை யாழ் அரச அதிபர் மங்கள விளக்கேற்றி, கொடியை ஏற்றி வைத்து ஆரம்பித்து வைத்தார்.

இந்து சமயப் பேரவைத் தலைவர் [illegible]

யாழ் அரச அதிபர் வைபவத்தில் மேலும் பேசுகையில்

எமது சமயம் ஆதியும் அந்தமும் இல்லாத புனிதமான சமயம் எமது சமயப்பண்பாடு கலாசார மரபுகளைப் பாதுகாக்க ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். அனைவரும் சேவை மனப்பான்மையுடன் ஒன்று பட்டுச் செயல்பட வேண்டும். இங்கு 50க்கும் மேற்பட்ட அநாதைச் சிறுவர்கள் உள்ளனர். இவர்களின் பிற்கால வாழ்வுக்கு அனைவரும் உதவ வேண்டும் என்றார்.

நல்லை ஆதீன குரு மஹா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குகையில் ''சிவனை முழுமுதற் கடவுளாக வணங்கும் நாம் இன்று சிவராத்திரி புனிதமான நாளில் இப் புனிதமான பணியைச் செய்ய முன்வந்துள்ளோம்.

அநாதைச் சிறுவர்களுக்கு உதவி செய்யும் நன் நோக்குடன் ஆரம்பித்த இக் கொடி வாரத்தில் சகலரும் வாரி [illegible] முன்வரவேண்டும்.

நாம் தருமம் செய்து இறைவனுக்குத் தொண்டு செய்வது போல் மக்களுக்கும், சிறுவர்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும்.

புனிதமான இன்றைய விரத நன்நாளில் வீண் கொண்டாட்டங்களையும், திரைப்படங்களையும் கைவிட்டு நல்ல தெய்வீகப் பணிகளைச் செய்ய முன்வர வேண்டும் என்றார்.

இந் நிகழ்வில் யாழ். தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி, யாழ். வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திரு க கந்தசாமி, உடுவில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் சாவகச்சேரி மேலதிக அரசாங்க அதிபர்திரு பு. சுந்தரம்பிள்ளை, இல்லஸ் தாபகர்குலபதிதிரு.ஆறுமுகம் சுந்தையா, பேரவைப் பொருளாளர் திரு சி நாகராசா, இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. வே. கே. தனபாலன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

கொடி விற்பனையை யாழ் அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் ஆரம்பித்து வைத்தார்.

பக்திப் பாடலை அடுத்து மகேசுவர பூஜையும் இடம் பெற்றது.

### அன்பளிப்பு

கொடித்தின நிகழ்வின் போது கோப்பாய் அரிமா சங்கத்தின் தலைவர் திரு. எஸ். பாலசுந்தரம் 15 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக இந்து சமயப்பேரவைத் தலைவர் திரு நா முத்தையாவிடம் கையளித்தார்.

இக் கொடிதின ஆரம்ப நன்நாளில் பல அன்பர்கள் மனமுவந்து வாரிவழங்கியது பாராட்டுக்குரிய விடயம் என பேரவைத் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா தெரிவித்தார். (இ-30)

**வள நாடே வளநாடு**
**அது நிலைக்க வழிகோலு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானில் அதிகாரப் போராட்டம் நடத்தும் இனவாதக் குழுக்கள்

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஆப்கானிஸ்தானில் மீண்டும் உள்நாட்டு யுத்தம் நடைபெற்று வருகிறது.

இந்த யுத்தத்தில் இதுவரை ஆயிரக்கணக்கான குடிமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 6லட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

மிகக் குறுகிய காலத்தில் உலகில் ஆப்கானிஸ்தானிலேயே ஆகக் கூடுதலான மக்கள் இடம் பெயர்ந்திருப்பதாக U. N. H C R. எனப்படும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அறிக்கை தெரிவிக்கிறது.

தலைநகர் காபூலில் இருந்து அநேகமாக முழு வெளிநாட்டவர்களும் வெளியேறி விட்டனர்.

14 ஆண்டுகளாக சோவியத் ராணுவத் தலையீட்டுக்கு எதி

## ரபானியின் ஆட்சியை கவிழ்ப்பதே பட்டாணியரின் ஒரே நோக்கம்

ரான இணைந்து போராடிய ஆப்கானிஸ்தானியர்கள் தற்போது இன ரீதியாகவும், மத ரீதியாகவும் பிரிந்து நின்று அதிகாரப் போரில் இறங்கி உள்ளனர்.

இந்தப் போரில் ஜனாதிபதி புர்ஹானுடீன் ரபானியும் (Burhanuddin Rabbani) அவரது பாதுகாப்பு அமைச்சர் அஹ்மட் ஷா மாசூட்டும் Ahmad Shah Massoud) ஓர் அணியில் நிற்கிறார்கள். இவர்கள் இருவரும் ஒரே இனத்தவர்கள்.

எதிர் அணியில் உள்ள இருவரில் ஒருவர் அப்துல் ராஷீத் டொஸ்ரம் (Abdul Rashid Dostam) மற்றவர்பட்டாணியரான கல்புடீன் ஹெக்மத்யார் (Gulbuddin Hekmatyar)

உஸ்பெக் இனத்தவரான டொஸ்ரமிடம் 5000 பேரைக் கொண்ட பலம் வாய்ந்த படை அணி ஒன்று உண்டு.

ஜனாதிபதி ரபானியின் படைகள் ஓர் அணியிலும் பிரதமர் ஹெக்மத்யார் மற்றும் டொஸ்ரமினின் படைகள் மறு அணியிலும் நின்று தற்போது நடத்தும் அதிகாரப் போராட்டத்தில் சமரசம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இதுவரை தென்படவில்லை. தாஜிக் இனத்தவரிடமிருந்து ஆட்சியை மீண்டும் கைப்பற்றுவதே பெரும்பான்மை பட்டாணியரின் நோக்கமாக இருந்து வருகிறது.

### ஆப்கானிஸ்தானின் எல்லைகள்

ஆப்கானிஸ்தான் மத்திய ஆசியாவின் தென்பகுதியில் அமைந்துள்ளது.

வடக்கே முன்னாள் சோவியத் யூனியன் —

வடகிழக்கே சீனாவின் ஒரு முனை, காஷ்மீர் —

கிழக்கேயும், தெற்கேயும் பாகிஸ்தான் —

மேற்கே ஈரான் — இவையே ஆப்கானிஸ்தானின் எல்லைகள்.

ஆப்கானிஸ்தான் மலைகள், பாலைவனங்கள் நிறைந்த ஒரு விவசாய நாடு ஆனால் முழு நிலப்பரப்பிலும் 12 சதவீத நிலமே விவசாயம் செய்வதற்கு ஏற்றது.

ஆப்கானிஸ்தானின் சனத்தொகையில் 90 சதவீதமான மக்கள் கிராமப்புறங்களிலேயே வசிக்கிறார்கள். கிராமப் புறங்களில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கழுதைகள், ஒட்டகங்கள் இவர்களது பிரதான போக்குவரத்துச் சாதனங்கள்.

### வரலாறு

2ஆம் உலக மகாயுத்த காலத்தில் ஆப்கானிஸ்தான் நடுநிலைமை நாடாக இருந்தது.

1960இல் இங்கு மக்கள் ஜனநாயகக்கட்சி என்ற பெயரில் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது.

1964ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் மன்னர் ஆட்சி முறையுடன் நாடாளுமன்ற ஆட்சி முறையும் அறிமுகப்படுத்தப் பட்டது.

அப்போது மன்னராக இருந்தவர் ஷாஹிர்ஷா (Zahir Shah)

பிரதமராக இருந்தவர் அவரது மைத்துனர் மொஹமட் டாவூட் (Mohamed Deoud)

1973இல் டாவூட்டினால் மன்னர் ஷாஹிர்ஷா பதவி கவிழ்க்கப்பட்டார்.

மொஹமட் டாவூட்டுக்கு கம்யூனிட் கட்சி ஆதரவு வழங்கியது. அதில் இருந்து கம்யூனிஸ்ட்டுகளின் ஆதிக்கம் ஆப்கான் அரசியலில் முதன் முதலாக தென்பட ஆரம்பித்தது.

1978 ஏப்ரலில் ஆப்கானிஸ்தானில் நடந்தமற்றொரு புரட்சியின் போது மொஹமட் டாவூட் அரண்மனையிலேயே படுகொலை செய்யப்பட்டார்.

சுமார் 5 ஆயிரம் படையினரின் உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்றிய புதிய ஆட்சியாளர்கள் எந்த நேரமும் அமெரிக்க ஆதரவுச் சக்திகளினால் கவிழ்க்கப்படும் நிலைமை உருவாகியது.

இதனை அடுத்து 1979 ஆம் ஆண்டு சோவியத் யூனியன் தனது படைகளை அப்கானிஸ்தானுக்குள் அனுப்பியது.

ஆப்கானிஸ்தானின் சனத்தொகையில் 50 சதவீதமானோர் பட்டாணியர்கள் (Pushtun) இவர்களது மொழி பாஸ்ரோ (Pashto).

1992 ஏப்ரல் மாதம் ஐக்கியநாடுகள் சபையின் தலையீட்டில் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு தாஜிக் இனத்தவரான புர்ஹானுடீன் ரபானி ஜனாதிபதியாகும் வரை 250 வருடகாலமாக ஆப்கானிஸ்தான் அரசியலில் பட்டாணியர்களே ஆதிக்கம் செலுத்தி வந்தனர்.

பாகிஸ்தானின் நான்கு மாகாணங்களில் ஒன்றான வடமேற்கு மாகாணத்தின் பெரும்பான்மை இன மக்களும் பட்டாணியர்களே

பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணம் முன்னர் ஆப்கானிஸ்தானின் ஒரு பகுதியாக இருந்தது தற்போதைய யுத்த கதாநாயகர்களில் ஒருவரான பிரதமர் ஹெக்மத்தியாரும்பட்டாணியரே. இவரது இஸ்லாமியகட்சியின் பெயர் Hezb-i- Islami.

தாஜிக் (Tajik) இனத்தவர்களான டாறி (Dari) மொழி பேசுவோர் எண்ணிக்கை 33 சதவீதம் ஆகும்.

தாஜிக் இனத்தவர்களுக்கு ஈரானுடன் நெருங்கிய வரலாற்றுத் தொடர்பு உண்டு.

தற்போதைய ஜனாதிபதி ரபானியும் தாஜிக் இனத்தவரே. ரபானியின் கட்சி இஸ்லாமிய சமூகக் கட்சி (Jamiat-i- Islami).

மற்றும் இங்கு உஸ்பெக் துருக்கி மொழி பேசுவோர் 17 சதவீதம். தற்போதைய

**உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

அதிகாரப் போராட்டத்தில் மூன்றாவது நபரான அப்துல் ராஷீட்டொஸ்ரம் உஸ்பெக் இனத்தவர்.

### மதரீதியிலும் பிளவு

இனத்தினால் மட்டும் அல்ல மதத்தினாலும் ஆப்கானிஸ்தான் பிளவுபட்டு நிற்கிறது.

முழுச்சனத்தொகையில் முக்கால் பங்கினர் சுனி (Sunni) முஸ்லிம்கள். ஏனையோர் ஷியா (Shia) முஸ்லிம்கள்.

பட்டானியர்களும், தாஜிக்கியர்களும்—

சுனி முஸ்லிம்களும், ஷியா முஸ்லிம்களும்—

இனமத ரீதியாகப் பிரிந்து

(5 ஆம் பக்கம் பார்க்க)

# பகை விரட்டி இருள்போக்க விழைந்த சிறுசுடர் இளைஞன்!

**சங்க இலக்கிய நயம்**

நல்லைப் படைப்பலத்தையும் பெரிய நிலப்பரப்பையும் தன்பாற்கொண்ட வேந்தன் ஒருவன் தன்செருக்கின் காரணமாக அயல் நாட்டைப் போரில் வென்று அடிமைப்படுத்த முற்பட்டான். போரின் மீது இவன் கொண்ட பேராவலை அயல் நாட்டு அரசன் தெரிந்து கொண்டான். அவன் ஆளும் பகுதி சிறிய நிலப்பரப்பாக இருந்தது. அவனது படையின் தொகையும் சிறியதாகவே இருந்தது ஆனால் அந்த அரசன் வீரத்திலும் தன்மானத்திலும் நாட்டுப் பற்றிலும் நிகரற்றவனாக விளங்கினான்.

பகையரசன் படையெடுக்கிறான் என்பதை அறிந்த சிறு நிலப்பரப்பை உடைய அரசன் போருக்குத் தயாரானான். அவனுக்கு படையினரின் வீரத்தில் பெரும் நம்பிக்கை இருந்தது. எத்தகைய பெருவேந்தரையும் போரிற் புறமுதுகிட்டு ஓடச் செய்ய தன்னாலும் தன்படை வீரராலும் முடியுமென்று அவன் நம்பியிருந்தான். அதனால் போரென்றதும் அவன் தயக்கங்கொள்ளாது போரை வரவேற்க ஆயத்தஞ் செய்தான்.

அந்த நேரத்தில் மிகவும் இளவயதினனாகிய வீரன் ஒருவன் அரசனைக்காணவிரைந்து வந்தான். வந்தவீரன் முதலில் அரசனுக்கு வணக்கஞ் செலுத்தினான். வணக்கம் செலுத்திய அவன் அரசனைப் பார்த்து பகையரசனைப் புறமுதுகிட்டோடச் செய்ய எங்கள் நாட்டுப் படை முழுவதும் போர்க்களஞ் செல்ல வேண்டியதில்லை எனக்கு ஒரு வாய்ப்புக்கொடுங்கள், நான் ஒருவனே பகையரசனையும் அவன்பெரும் படையையும் புறமுதுகிட்டோடச் செய்வேன் என்றான்.

அரசன் உவகையுடன் அவனைப் பார்த்தான். அந்த

உறுசுடர் வாளோடு ஒருகால் விலங்கின்
சிறுசுடர்முற் பேரிருளாங் கண்டாய் - எறிசுடர்வேல்
தேங்குலாம் பூந்தெரியல் தேர்வேந்தே நின்னோடு
பாங்கலா மன்னர் படை

வீரன் மேலும் தொடர்ந்தான். இருள்பெரியதாக இருக்கலாம் ஆனால் ஒரு சிறிய விளக்கைக் கண்டால் பெரிய இருள் உடனேயே ஓடிவிடும். எங்கள் பகைவர்கள் பெரிய இருளாக இருந்தாலும் நான் சிறு சுடர்விளக்காக இருக்கிறேன். ஆதலால் உங்களோடு மாறுபட்ட பகைவரின் படையாகிய பேரிருளை நீக்க சிறு சுடராகிய நான் ஒருவனே போதும். எனக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுங்கள் என்று கேட்டான்.

வீரன் கூறியவற்றைக் கேட்ட அரசன் அப்போதே போரில் வென்றுவிட்டது போல் மகிழ்வுற்றான். போரில் வெல்வதற்கு படையின் தொகையை விட நெஞ்சத்து உரமே பிரதானம் என்பதை அறிந்து கொண்டான். அந்த ஒரு வீரனைப் போலத்தான் நாட்டிலுள்ள எல்லா இளைஞர்களுமே நெஞ்சுரத்தால் நிமிர்ந்த திறநோர்கள் என்பதையும் அவன் நன்கு அறிவான்.

வீரனின் நெஞ்சுரத்தை விளக்கும் பாடல் புறப்பொருள் வெண்பாமாலையில் வருகிறது.

இப்பாடலின் பொருள் 'ஒளிபொருந்திய வேலையும் தேன்பொருந்திய மாலையையும் உடைய அரசனே! உன்னுடைய பகைவேந்தருடைய படை நான் என்னுடைய ஒளி பொருந்தியவாளோடு போர்க்களத்தில் எதிர்ப்பட்டால் சிறிய விளக்கைக் கண்ட பேரிருள் கெட்டு ஓடும்'' என்பதாகும்.

சந்திரமௌலி

★

# மேய்ப்புப் பணி மாநாட்டில் புதுப்பித்தல் காண்போம்!

**சமயம்**

> கடந்த 8ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் மேய்ப்புப் பணி மாநாட்டை ஒட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

இன்று நம் தலத் திருச்சபையில் புதுப்பித்தல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. இப்புதுப்பித்தலானது வாழும் திருச்சபைக்கு உயிரூட்டத்தைக் கொடுக்க வேண்டும். இப்புதுப்பித்தல் பங்குத் திருச்சபையில் முதலில் தோன்ற வேண்டும். ஏனெனில் பங்கு என்பது வாழும் மக்களைக் கொண்ட ஒரு குழுமம். இதனை நாம் பங்குத் திருச்சபை என்கிறோம். இவர்கள் ஆதி கிறிஸ்தவர்களை ஒத்த குழும வாழ்வு, நட்புறவு, செபித்தல், இறைவார்த்தை ஏற்றல் ஆகியவற்றில் சாட்சிகளாக வேண்டும். இதற்காக நாம் முதலில் பங்குத் திருச்சபையைப் புதுப்பிக்க வேண்டும்.

### பொது நிலையினர்

அடுத்துப் பொதுநிலையினர். இவர்கள் திருச்சபையிலே முக்கிய பங்காற்ற வேண்டியவர்கள். 2 ஆம் வத்திக்கான் சங்கம் பொதுநிலையினருக்கு முக்கிய இடத்தை கொடுத்தாலும் அது அவர்களைச் சென்றடையவில்லை. அவர்கள் பார்வையாளர்கள் என்ற நிலையை மாற்றி, பங்காளிகள் என்ற நிலையை உருவாக்க வேண்டும். பொது நிலையினரும் தங்கள் அழைப்பை ஏற்று, இதுவரையில் தாங்கள் ஆளப்படும் குலமாக இருந்த நிலையிலிருந்து விடுபட்டு, எழுச்சி நிலையில் குருக்களோடு சேர்ந்து புதிய பாதையில் திருச்சபையை இட்டுச் செல்ல வேண்டும். குருக்களும் பொதுநிலையினரும் மனமாற்றங்களைப் பெற்று வாழும் திருச்சபையை வளம் நிறைந்த வளரும் திருச்சபையாக மாற்ற வேண்டும்.

### குருக்களின் பங்கு

புதுப்பித்தலில் குருக்களின் பங்கும் முக்கிய இடம் பெறுகிறது. குருத்துவத்தின் மகத்துவம் இங்கு இன்று வேண்டப்படுகிறது. கிறிஸ்து படித்தவர்களையோ, பணக்கார வர்க்கத்தினரையோ தேடிச் செல்லவில்லை. மாறாக பாமரர்களை, ஏழ்மையில் வாடியவர்களை, நோயால் பிணியால், துன்பம் உற்றவர்களை, புறக்கணிக்கப்பட்டவர்களை, பாவிகளை நாடிப் போனார். இவர்கள் இடத்தில்தான் முதலில் நற்செய்தியை, நற்செய்தி நிலையில் இறையரசின் செய்தியை மக்களுக்கு எடுத்துச் செல்லக் கூடியவர்களாக மாற வேண்டும் இவர்களின் வாழ்வு மக்களுக்கு எடுத்துக் காட்டாக மாற வேண்டும்.

கிறிஸ்துவில் விளங்கிய எளிமை, பொறுமை. செபித்தல் முதலிய வற்றில் இவர்களது நிலை புதுப்பிக்கப்பட வேண்டும். சமத்துவம், சகோதரத்துவம், புரிந்துணர்வு என்பன ஊக்குவிக்கப்படவேண்டும். அர்ப்பண வாழ்வின் புனிதத்தை மக்களுக்கு முன் இடறலாய் இல்லாது தூய்மையுடன் காக்கவேண்டும். இது மக்கள் இன்று எதிர்பார்க்கும் ஒன்றாகும்.

### வீட்டுக்கொரு விவிலியம்

இறைவாக்கு எல்லாமக்களிடையேயும் சென்றடையக் கூடிய விதத்தில் வேதாகம அறிவு மக்களுக்குப் புகட்டப்பட வேண்டும். இறையரசு மக்களிடையே வளர, இறைவார்த்தை அவர்களிடையே விதைக்கப்பட வேண்டும். ''வீட்டுக்கொரு விவிலியம்'' என்ற நிலையை மக்களிடையே விதைக்கும் அதே வேளையில், விவிலியத்தை அறிய, படிக்க, ஊக்குவிக்க வேண்டும்.

வழிபாடு எமது வாழ்க்கைக்கு முக்கியமாகும். இவ்வழிபாடு எம் ஆன்மீகத்தை நன்கு வளர்க்கக் கூடியதாகவும், பயிற்றக் கூடியதாகவும், வாழ்வின் புதுப்பித்தலாகவும் இருக்க வேண்டும். வழமை, பாரம் பரியம், உரிமை என்பவற்றை நீக்கி இறைப்பற்றை ஊட்டக் கூடிய முறையில், இறைவார்த்தை மக்களிடையே சென்றடையக் கூடிய வகையில், நிலைத்து நிற்கக் கூடிய முறையில் அமைதல் மிகச் சிறந்தது.

''உலகெங்கும் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்'' என்ற இயேசுவின் அறைகூவலை, திருமுழுக்குப் பெற்ற பொது நிலையினரும் கவனத்தில் கொண்டு நற்செய்தி அறிவிப்புப்பணியில் இறங்க வேண்டும். எல்லோர் வாழ்வும் நற்செய்தியின் வாழ்வாக வேண்டும். நாமே நற்செய்தியாக வேண்டும்.

### திருச்சபையின் பணி

இயேசு தமது வாழ்வாலும், போதனையாலும் முழு மனித விடுதலைக்காக உழைத்தார்.

இதே போன்று திருச்சபையும் நீதிக்காக, சமாதானத்துக்காக குரல் கொடுக்கின்றது; மனித முன்னேற்றத்துக்காக உழைக்கின்றது.

திருச்சபையின் இப் பணியானது இறையரசில் கிடைக்கும் முழுமனித விடுதலையை எல்லோரும் ஏற்றுக்கொள்ள உழைப்பதாகும். இது எல்லோருக்கும் உணர்த்தப்பட வேண்டும்.

இவ்வாறான புதுப்பித்தல்கள் மூலம் நம் தலத்திருச்சபையானது நற்செய்தியின் மயமாக, ஆவியின் வழி நடத்தலால் ஊட்டம் பெற்ற மக்களுக்காக என்ற நிலையில் பற்றுயிர், புதுப் பிறப்புப் பெறவேண்டும்.

மோ. தார்சீசியஸ்

★

நல்லூர் இசை மன்றம் வழங்கும்
கலை நிகழ்ச்சி

இடம்: இராம் கலைஞர் மண்டபம்
காலம்: இன்று (13 - 03 - 1994)
பிற்பகல் 5-30 மணி

✻ இரு வயலின் இசை
அமைப்பு வயலின் வித்துவான்
ஆர். எஸ். கேசவமூர்த்தி

★ நீராவியடி கலைக் கல்லூரி தயாரிப்பில்
கதகளி பரத கலாமணி இலங்கை வேந்தனும்
அவரது மாணவர்களும் வழங்கும்

● கதகளி பரத நாட்டியம் ●



இலங்கை வேந்தனின் நடனத்தோற்றம்

★ சிறப்பு நிகழ்ச்சி
நல்லூர் இசைமன்றம் பெருமையுடன்
தொகுத்து வழங்கும்
''இன்னிசைத் தென்றல்
இலம் மாலை கானங்கள்''

★ சவுண்ட்ஸ்: சேகர் சவுண் ஒப் (F) மியூசிக்
— நல்லூர் இசை மன்றம்.

(29883)

# நாட்டின் கல்வி மறுமலர்ச்சிக்கு உழைத்த பெரியார் நேசையா!

தனது 92ஆவது வயதில் அண்மையில் மறைந்த பேராசிரியர் நேசையா ஒரு சிறந்த கல்விமானாகவும், சமூக சீர்திருத்த வாதியாகவும் திகழ்ந்தார். பிரபலமான கல்லூரிகளில் ஆசிரியராகவும் பின்பு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் விரிவுரையாளராகவும் கடமையாற்றி, 1962ஆம் ஆண்டு அரச சேவையிலிருந்து அவர் இளைப்பாறினார்.

கொழும்பில் பல சௌகரியங்களுடன்வாழுகின்றவாய்ப்புக்கள் இருந்தும், தமிழ் மண்ணிலேயே வாழவேண்டும் என்னும் திடசங்கற்பம் பூண்டவராக வாழ்ந்து முடித்தவர் அவர்.

ஆசிரிய தொழிலை ஒரு வாண்மையுடைய தொழிலாக மிளிரச் செய்வதற்கு அரும்பாடுபட்டவர்; ஆசிரியர் சங்கங்களை உருவாக்கி அவற்றிற்கு ஊடாக அவர்கள் தமது உரிமைகளையும், அந்தஸ்தினையும் உயர்த்திக் கொள்ள உதவியவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் டிப்புளோமாப் பயிற்சியை ஒழுங்கமைப்பதில் பேராசிரியர் கிறீன் அவர்களுக்கு நேசையா பெரும் உதவி புரிந்தார்.

முன்னை நாள் துணைவேந்தர் ஜவர் ஜெனிங்ஸ் திரு. நேசையாவின் ஆரம்பிக்க கட்டுரைகளால் கவரப்பட்டு அவரை விரிவுரையாளர் பதவிக்கு நியமிக்க மனமுவந்து முன் வந்தார்.

நேசையா தாம் வாழ்ந்த காலத்துக் கல்விச் செயற்பாடுகளிலும், பிரச்சினைகளிலும் அதிக ஈடுபாடு காட்டினார்; தாய் மொழியினை போதனா மொழியாகப் பயன்படுத்த வேண்டுமென வலியுறுத்தினார். ஒரு மாணவன் தன் கல்விச் சாதனைகளில் உச்ச நிலை அடைய தாய் மொழிக் கல்வியே சிறந்த கருவியாகும் என அவர் கருதினார்.

சமூகக் கல்வியினை ஒரு பாடமாக விதந்துரைத்த நேசையா, அதை நடைமுறைப்படுத்துவதற்கு ஒன்றிணைந்த கல்வித் திட்டத்தின் அவசியத்தினை வலியுறுத்தினார்.

கல்விச் சுதந்திரத்தின் அவசியத்தினை எடுத்துரைத்த அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் கல்விச் சுதந்திரத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தார்!

ஒரு சமூகத் தலைவராகவும் சமூகச் சீர்திருத்தவாதியாகவும் அவர் செயற்பட்டார்; சாதி வேறுபாடுகளின் பலவித கோலங்களையும் எதிர்த்துப் போராடினார்; தாழ்த்தப்பட்டோரின் பிள்ளைகள் சிலரைத் தன் இல்லத்திலேயே வைத்துப் பராமரித்தார். அவர்களுக்கு நல்ல உத்தியோகங்களையும் பெற்றுக்கொள்ள உதவினார்.

மகாத்மா காந்தியின் உன்னத தத்துவங்களினால் கவரப்பட்ட நேசையா காந்திய வாழ்க்கைப் பாணியைத் தமதாக்கிக் கொண்டார். பணத்தை வருங்காலத்திற்காகச் சேமித்து வைப்பதைத் தவிர்த்து, அதனை நல்ல காரியத்திற்கு பயன்படுத்துவதே சாலச் சிறந்தது எனத் துணிந்தார். கதர் உடையும் சுய ஒறுப்பு வாழ்வும் பெரிதெனக் கொண்டார்.

கைதடி செவிடர் - குருடர் பாடசாலையின் முகாமையாளராகவும் கடமையாற்றினார்.

கூட்டுறவு இயக்கத்தில் அதிக நம்பிக்கை கொண்ட நேசையா யாழ்ப்பாணத்தில் பல கூட்டுறவுச் சங்கங்கள் உருவாகுவதற்குக் காரணமாகவிளங்கினார்; 'கூட்டுறவாளர்' என்னும் சஞ்சிகைக்கு ஆசிரியராகக் கடமை புரிந்தார்.

1981 ஆம் ஆண்டு இலங்கைப் படையினரால் எரிக்கப்பட்ட யாழ் மாநகரபொது சன நூல் நிலையத்தினை திருத்தியமைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளில் பங்காற்றினார்.

மனித உரிமைகளுக்காகவும் அவர் குரல் கொடுத்தார்.

தந்தை செல்வா அறங்காவல் குழுவின் தலைவராகக் கடமையாற்றி, ஞாபக தூபியை அமைப்பதற்கு வழிகோலினார். யாழ். நகரக் கட்டடங்களை மீள அமைப்பதற்கு செல்வா அறங்காவல் நிதியத்திலிருந்து கணிசமான பணத்தை யாழ். மாநகர சபைக்கு வழங்கினார். மேலும் ஒரு பகுதியினை யாழ். பல்கலைக்கழகத்திற்கு — ஏழைப் பிள்ளைகளுக்குப் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு — கொடுத்துதவினார்.

தந்தை செல்வாவின் அரசியல் சிந்தனைகளினால் கவரப்பட்ட நேசையா வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழர்கள் இலங்கை அரசமைப்புக்குள் சுயாட்சியினைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் எனவும் அவ்வாறு முடியாவிட்டால் தனிநாடு பெறவும் முயற்சிக்க வேண்டும் எனவும் விதந்துரைத்தார்.

அவரின் மறைவு கல்வி மறுமலர்ச்சிக்கும், சமூக உயர்ச்சிக்கும் உழைத்த ஒரு பெரியாரை நம்மிடமிருந்து பிரித்துவிட்டது.

கே. கே. அற்புதராஜா.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு கிழமை நிரம்பிய சில்கி, பிராமா, சிவப்பு பிறைட், பாபடிக்கல்ஸ் குஞ்சுகளும் அடைவைக்க உகந்த முட்டைகளும் உடன் விற்பனைக்குண்டு. 684, நாவலர் வீதி, (நாவாந்துறை வீதி, குமரன் படிப்பகத்திற்கு அருகில்) ஐந்துசந்தி, யாழ்ப்பாணம். (7117)

நல்ல நிலையில் தற்போது பாவனையில் உள்ளதுமான றலி துவிச்சக்கரவண்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: 26, மே/பா உதயன் சேவை நிலையம் 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (7029)

அடை வைப்பதற்கு உகந்த லைனைன் பிறவுண், பன்ரம், வெள்ளடி கோழிமுட்டைகளும், நவீன வெள்ளை தாரா முட்டைகளும், வெள்ளடி பன்ரம் குஞ்சுகளும் வெள்ளை முயல் குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: "கதிர்" தேநீர்ச்சாலை, துறைமுகச்சந்தி, கொழும்புத்துறை. (29877)

### சனிநீராடு

ஒலிவ் ஸ்நானப்பவுடர் சுகந்தருவது. தேர்ந்தெடுத்த சரக்குகள் மூலிகைகள் மட்டுமே கொண்டு தயாரித்தது. கிரசுக்கும் எண்சாண் உடம்பிற்கும் இதமளிப்பது. உச்சப் பயனுக்கு கொதிநீரில் ஊற வைத்துப் பாவிக்கவும். பற்கற் ரூபா 3/-. 25 பக்கற் கொண்ட அட்டை ரூபா 60/- மட்டுமே. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. "மின்க்வைற்".. (சி 7545)

### சீயாக்காய்ப் பவுடா

சாயல்கள் ஐந்தே மென்மையான காற்றைப் போன்றதே. காவேரி தோற்றப் பொலிவுடன் கூந்தல் அழகை வழங்குதே. உங்கள் மேனி நயமானதையே ஆவலுடன் எதிர்பார்க்கிறது. காவேரி சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். (29868)

### கோழிக்குஞ்சு விற்பனை

Golden Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் உடன்பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் [29823]

### இறைச்சிக் கோழிகள்

இறைச்சிக்கோழிகள் சனி, ஞாயிறு புதன்கிழமைகளில் காலை 8-00 – 11-00 வரை சுத்தம்செய்து பெற்றுக் கொள்ளலாம் நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் (29824)

### வேலையாள் தேவை

உணவு பரிமாறுவதற்கும், சமையல் வேலை செய்வதற்கும் அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை நேரில் வரவும். நிக்கோ சுவீற்ஸ் அன்ட் கிறீம் ஹவுஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (7121)

### தேவை

எமது ஆலய நிர்வாகத்திற்கு உதவியாளராகவும் ஆலயப் பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளக்கூடிய வருமான ஆசாரசீலர் ஒருவர் தேவை சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் தபால்மூலம் 31-3-94க்கு முன் விண்ணப்பிக்கவும். முகவரி: செயலாளர், கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலனசபை, கொக்குவில். (29854)

வயதான தம்பதியர்க்கு சமையல் செய்யவும், வீட்டை நிர்வகிக்கவும் தெரிந்த குடும்பப் பொறுப்பற்ற பெண் உதவியாள் உடன் வரவும். சம்பளம் நேரில். 25, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். (29837)

### அச்சகம் தேவை

புதிதாக அச்சகம் அமைக்க அச்சு இயந்திரம் உதிரிப் பாகம், எழுத்துக்கள், கட்டர் உட்பட அனைத்தும் உடன் தேவை. தொடர்பு: 931, மே/பா உயதன், யாழ்ப்பாணம். (சி-7446)

### மணமக்கள் தேவை

நட்சத்திரம் மகம், உதயச் செவ்வாய் 34 வயது, இந்தப் பெண்ணுக்கு அரச கூட்டுத் தாபன, வங்கி ஊழியர் அல்லது சொந்த தொழில்புரியும் மணமகனும் பூசம் நட்சத்திரம் 38 வயது, வெளிநாட்டு உதவிக் கணக்காளருக்கு நல்ல தோற்றமுள்ள படித்த 28—34 வயது மணப்பெண்ணும் தேவை. 930, மே/பா உதயன். (7131)

### SPOKEN ENGLISH

பேசும் ஆங்கிலம் 4 மாதங்களில் உளவியல் ரீதியாக அடிப்படை இலக்கணத்துடன் கற்பிக்கப்படும். சனி, ஞாயிறு, செவ்வாய், வியாழனில் 9 00 மணிக்கும், ஏனைய நாட்களில் 3-00 மணிக்கும் ஆரம்பமாகும். R. Sivalingam, New English Acadamy, 82, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம். (29876)

### வீடியோ பிரதிகள்

எமது நிறுவனத்தில் காலை 8—12 வரையும், மாலை 3—6 வரையும் வீடியோ பிரதிகள் பெற்றுக்கொள்ளலாம். புதுப் படங்களும் உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர், [29642]

### தவறிவிட்டது

3 - 3 - 94 அன்று எனது தேசிய அடையாள அட்டை கொக்குவில் மீன்சந்தைக்கும், பிரம்படி ஒழுங்கைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். இ. நவரத்தினம், 47, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில். (7129)

ஏழாலை மேற்கு சுப்பிரமணியம் நாகராஜா அவர்களுடைய தேசிய அடையாள அட்டை 470812605 V ஏழாலைக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் 11-3-94இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஏழாலை மேற்கு தம்புவத்தை வைரவர் ஒழுங்கை இல்லத்தில் அல்லது மின்சாரசபை அலுவலகம், 536/1, கே. கே. எஸ். வீதியில் தயவுசெய்து உடன்சமர்ப்பிக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7130)

## நோயாளர் அதிகரிப்பு

வடமராட்சி மார்ச் 13

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில், கடந்த சில தினங்களாக வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

காய்ச்சல், வயிற்றோட்ட நோய்களுக்கு சிகிச்சை பெற வருவோரே அதிகம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## 31 ஆம் நாள் நீங்கா நினைவலைகள்

### திருமதி இராஜேஸ்வரி செல்லத்துரை

(பேபி ரீச்சர்)

(கோண்டாவில் மேற்கு)

எனதன்புச் சோதரியே! என்னிளையவளே!
உனதன்புக் கணவரையும் புதல்வரையும் -
மன்னுபுகழ்
ஆசிரியத் தோழரையுமன்பு மாணாக்கரையுங்
காசினியிலேங்க விட்டுக் கலந்தாயோ ஈசனையே!

திருமதி சத்தியரஞ்சிதம் சந்திரசேகரி,
(பேபி ரீச்சர்)

கோண்டாவில் மேற்கு. [29831]

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி மேகலா பசுபதி (கலா)

மண்ணகம்: 01 — 09 — 1967
விண்ணகம்: 13 — 03 — 1990

அக்காவாக அன்னையாக வந்துதித்த
எம் இனிய கலாவே!
அன்பால் அரவணைப்பால் அயலவரை
கவர்ந்தவளே!
பண்பையும் உன் பாசத்தையும்
பார்த்தவர்கள் பகிர்ந்துகொள்ள
தந்தையும், சகோதரரும், உறவினரும்
கற்பனைகள் கட்டிக்காக்க
உன்னை காலனவன் கவர்ந்து
செல்வான் என்று யாரறிந்தார்?

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;
அப்பா அண்ணன்மார் அண்ணிமார்,
தம்பி, தங்கை,
உற்றார், உறவினர்.

சாந்தியூர்,
புலோலி தெற்கு,
புலோலி.

## விவசாய டிப்ளோமா

### ஒருவருட, இருவருட கால இலவச பயிற்சி நெறிகள்

### ஒரு வருட விவசாய டிப்ளோமா

போதிக்கப்படும் பாடங்கள்

மிருக பரிபாலனம், பயிர் வேளாண்மை, பூங்கனியியல், விவசாய முகாமைத்துவம், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல் (ஆண்கள்), மனைப் பொருளியல் (பெண்கள்), ஆங்கிலம்

தகைமை:

க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை சித்தியடைந்திருப்பதுடன் 31 - 05 - 1994 இல் வயது 16 — 24 க்கும் இடைப்பட்டிருக்க வேண்டும்.

### இரண்டு வருட விவசாய டிப்ளோமா

போதிக்கப்படும் பாடங்கள்

முதலாம் வருடம் ஒரு வருடகால டிப்ளோமா நெறியிலுள்ள பாடங்கள் போதிக்கப்படும். இரண்டாம் வருடம் விவசாயத் தாவரவியல், விவசாய இரசாயனவியல், விவசாயப் பொறியியல், பயிர்ப் பாதுகாப்பு, விவசாய விரிவாக்கம், பயிர் வேளாண்மை, பூங்கனியியல், மிருக பரிபாலனம், மிருக சுகாதாரம் ஆகிய பாடங்கள் போதிக்கப்படும்.

தகைமை:

(அ) க. பொ. த. (உயர்தர)ப் பரீட்சை சித்தியடைந்திருக்க வேண்டும். விஞ்ஞான பாடங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அல்லது

க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் எமது நிறுவனத்தில் ஒரு வருடகால டிப்ளோமா பயிற்சி நெறியில் இரண்டாம் பிரிவுக்கு மேல் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஆ) 31 - 05 - 1994இல் வயது 18 — 26க்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டும்.


★ இரு பயிற்சி நெறிகளுக்கும் கற்கை காலத்தில் உதவு தொகை வழங்கப்படும். விருப்பமுள்ள இருபாலாரும் 20 - 04 - 1994க்கு முன் பின்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம் - சுன்னாகம் [29840]

## 31ஆம் நாள் இதய அஞ்சலி

மலர்வு: 12 — 03 — 1950

உதிர்வு: 11 — 02 — 1994



### அமரர் இராசா நாகேஸ்வரன்

(உப அதிபர், யா / நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை)

அன்னாரின் கடமை தவறா சேவையை நினைவு கூர்ந்து, ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை. [29860]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சீ. மரியாம்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

13 — 03 — 1994

நீங்காத உம் நினைவில்
நித்தமும் வாடுகின்றோம்
ஆண்டு மூன்றானாலும் - உம்
அன்பை மறக்க முடியுமா.

- குடும்பத்தினர்.

தம்பசை,
பருத்தித்துறை. [29852]

உ

சண்டிலிப்பாய் - சீரணி
அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள்
தேவஸ்தான
விநாயகர் சித்திரத் தேர்

## பவளக்கால் நாட்டும் வைபவம்

காலம்: நாளை 14 - 03 - 1994 திங்கட்கிழமை
நேரம்: பகல் 11-00 மணி — 12-00 வரை

புத்தூர் காளிகா சிற்பாலயம்
திரு. செ. பாலச்சந்திரன் குழுவினரின்
கலைத்திறனில் உருவாகி வரும்
விநாயகர் சித்திரத் தேரின்
"பவளக்கால் நாட்டும் வைபவம்"
நடைபெற இறையருள் கூடியுள்ளது.

அன்பர்கள், அடியார்கள் அனைவரும் வருகைதந்து விழாவை சிறப்பிக்குமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

- தர்மகர்த்தா சபை.

[29882]

## இதய அஞ்சலி

பிறப்பு: 13 — 10 — 1968

இறப்பு: 11 — 03 — 1994



### கந்தசாமி ஜெயிச்சந்திரன்

(ஜெயி)

அறிவெனும் ஒளிவிளக்காம் - நீ
அணைந்ததினாலே
இருளை அணைத்தவர்களானோம்!
எதிர்பார்க்கப்பட்டதாலே
ஏமாற்றப்பட்டோம் - உன்னை
நினைவு கூருகிறோம்.
இன்று மட்டுமல்ல என்றுமே!

உமது ஆத்ம சாந்திக்காக வண் - வடகிழக்கு கொண்டலடி விநாயகனைப் பிரார்த்திக்கும்;

"நியூஸ்ரான்லீஸ்"

95/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். [29881]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அருட்சகோதரி அகத்தீனா ஷிர்ட்

மாசி மாதம் 17ஆம் தி-தி இறைவனடி சேர்ந்த திருச்சிலுவைக் கன்னி அருட் சகோதரி அகத்தீனா அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 14 - 03 - 94 அன்று காலை 6-15 மணிக்கு யாழ். பேராலயத்திலும், அன்று காலை 6-30 மணிக்கு கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்திலும் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அருட்சகோதரி செலின்,
(மாகாணத் தலைவி).

தி. சி. க சபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். [29866]

## கண்ணீர் அஞ்சலி



### கந்தசாமி ஜெயிச்சந்திரன்

(ஜெயி)

அருள் நெறி மன்றம் தம்
அரும்பணி சிறக்க உழைத்த
ஆருயிர் தோழனே; அன்பனே!
வாடுகின்றோம் உன் பிரிவால்!

இணுவை சிவகாமி
அருள் நெறி மன்றத்தினர்,

[29884]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## ஏன், மௌனம்?

பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் ஒன்றை மூடி, இரண்டையும் ஒரு கலாசாலையாக இயங்க வைக்க கல்வி அமைச்சு வட்டாரங்கள் தீர்மானித்திருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

தமிழினத்தைப் பல்வேறு வழிகளில் அடக்கி, ஒடுக்க முயற்சித்துவரும் சிங்களப் பேரினவாதம் கடந்த காலங்களில் தமிழரின் கல்வித்துறையை நாசமாக்க, சீரழிக்க எடுத்த நடவடிக்கைகளின் ஓர் தொடர்ச்சியே இந்த முடிவாகும்.

யாழ்ப்பாணத்திலே தமிழர்களுக்கு ஐந்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் இருந்தன.

திருநெல்வேலியில் சைவ ஆசிரிய பயிற்சிக் கலாசாலை.

நல்லூரிலே தற்போது கல்வித் திணைக்களம் இயங்கும் வளாகத்தில் நல்லூர் ஆசிரிய கலாசாலை.

மற்றொன்று கொழும்புத்துறையில்;

கோப்பாயில் நான்காவது ஆசிரிய பயிற்சிக் கலாசாலை.

மற்றையது பலாலியில்—இது ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சி வசதிகளைக் கொண்டு, விளங்கியது.

காலக்கிரமத்தில் நல்லூர் திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் மூடப்பட்டு ஐந்து மூன்றானது.

1970களின் பிற்பகுதியில் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை செயல் இழக்க மூன்று இரண்டானது.

அதன் பின்னர் 1980களின் நடுப்பகுதியில் பலாலியைப் படையினர் ஆக்கிரமிக்க— ஆசிரிய தெய்வங்களின் கல்விக் கூடத்தில் சாத்தான்கள் குடி கொள்ள— அந்தக் கல்விக்கூடம் திருநெல்வேலிக்கு இடம் பெயர்ந்தது.

25 வருடங்களுக்கு முன்னர் ஐந்து ஆசிரிய கலாசாலைகள் இருந்த மாவட்டத்தில், இப்போதுள்ள மாணவர் எண்ணிக்கைக்கு பத்துக் கலாசாலைகளும் போதாது. தெற்கில் ஆசிரியர் பயிற்சி வசதிகளை வருடா வருடம் அதிகரிக்கும் அரசு, தமிழர் பகுதிகளில் பத்தை ஒன்றாக்க சதி செய்கிறது!

ஆனால் ஆசிரியர்களுக்கு தொலைக்கல்வி முறை போன்ற வசதிகள் மூலமும்— சனி, ஞாயிறு வார இறுதி வகுப்புகள் மூலமும்—

ஆசிரியப் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புக் கிட்டியதை அடுத்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் முழுநேர பயிற்சி ஆசிரியர்களாகச் சேர்ந்து கொள்வோரின் எண்ணிக்கை தற்காலிகமாக வீழ்ச்சியுற்றது.

கடந்த வருடம் ஏற்பட்ட இந்த வீழ்ச்சியைப் பயன்படுத்தி உடனடியாக வடக்கில் இருந்த ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளில் ஒன்றை மூடிவிட அரசு அதிகாரிகள் கபட நோக்கத்துடன் திட்டமிட்டிருக்கிறார்கள்.

ஒரு புறம் அதிகாரப் பரவலாக்கல் என்று பேசிக் கொண்டு—

மாவட்ட மட்டத்தில் கல்வி நிர்வாகத்தில் இருந்த அதிகாரங்களை மாகாணசபை பறித்துக்கொள்கிறது.

மறுபுறத்தில் தமிழரின் சொத்தான கல்வியை அவர்களிடமிருந்து பிடுங்குவதற்காக ஆசிரியர்களை உருவாக்கும் கல்லூரிகளுக்கு மூடுவிழா நடத்த அரசு முனைந்துள்ளது.

ஆனால் இந்த நடவடிக்கைகளை எமது கல்வி உலகம் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பது போல் ஒரு சாயல் தென்படுகின்றதே?

ஆசிரியர்களுக்காக — கல்வி நிர்வாகத்துக்காக — எமது இனம் சமுதாயத்தின் கல்விக்காக — குரல் எழுப்ப வேண்டிய அமைப்புக்கள் ஓய்ந்து விட்டன போல் தெரிகிறது? ஏன்?

அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்பதை மறக்கலாமோ? அநியாயங்களை எதிர்த்து நிற்காவிடில் எமது உரிமைகளைப் பெறுவது எப்படி?

எமது கண்ணான கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்ட வேண்டியவர்கள் ஓய்ந்திருப்பது ஏன்? இந்த மௌனம் அரசின் சூழ்ச்சியை அங்கீகரிப்பதாக அல்லவா முடிந்து விடும்.

# கிழக்கைச் சிங்களவர்களின் பிரதேசமாக்கிவிட்டு வடக்கில் தமிழரை ஒடுக்குவதற்கு டி. பி. உறுதி

ஸ்ரீலங்காவின் ஐந்து முக்கிய பௌத்த பீடங்களில் அமரபுர நிக்காயாவும் ஒன்று. அந்த பௌத்த பீடத்தின் அதிபதி— பீடாதிபதி— ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு சான்றிதழ் வழங்கிப் பாராட்டி இருக்கிறார்!

எங்கள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மலைநாட்டைச் சேர்ந்த சிங்கள பாதுகாவலன். சிங்கள இன உணர்வு

**அரசியல்**

அவரிடம் உள்ளது சிங்கள-பௌத்த உணர்வுகள் கொண்ட ஓர் சிறந்த பௌத்தன் — என்பதே அமரபுர பீடாதிபதி வண. மதிவே பஞ்ஞாசீல மகாநாயக்கதேரர் வழங்கிய சான்றிதழ் — பாராட்டிதழ்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தாம் மீண்டும் ஜனாதிபதியாக வருவதற்குத் தேவையான தகுதி என்று எதனை விரும்பினாரோ, அந்தத் தகுதி அவரிடம் இருப்பதாக பௌத்தபீடம் ஒன்றின் அதிபதி மிக வெளிப்படையாகப் பாராட்டுப் பத்திரம் வழங்கியுள்ளார்.

> கிளாலியைத் திறப்பது, கடல் வலயத் தடைச்சட்டத்தை நீக்குவது, சமாதானப் பேச்சு என்பதெல்லாம் பிரசாரப் பொய் முகமே.

இவரைப் பின்பற்றி ஏனைய பீடாதிபதிகளும் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கும்போது விஜேதுங்காவின் ஆசை வெகு இலகுவில் நிறைவேறி விடும். இந்த நாட்டின் மிகப் பெரும்பான்மையினரான சிங்கள-பௌத்தர்களின் வாக்குகள் அப்படியே ஒரே திரட்டாக, திரளாக அவருக்கு வந்துவிழும், குவியும்.

சிங்கள-பௌத்த உணர்வு என்று பௌத்த குருமாரும், அரசியல்வாதிகளும் குறிப்பிடுவது உண்மையில் சிங்கள பௌத்த பேரினவாத வெறியைத் தான். தெற்கில் அந்த வெறி இல்லாத சிங்கள மக்கள் — வாக்காளர்கள் — ஆகக் கூடியது ஒரு பதினைந்து சத வீதம் தேறினார்கள் இல்லை. அவர்களையும் சிங்களவர்களில் இறிஸ்தவர்களாக உள்ள பதினைந்து சத வீதத்தினரையும் தவிர்த்தாலும், முழுச் சிங்கள வாக்காளர்களிலும் ஐம்பது சத வீதத்துக்கு மேற்பட்ட வாக்குகள் டி. பிக்கே சேரும் என்று சுலபமாகக் கணக்கு பார்க்கலாம்.

அவ்வாறு சிங்களவர்களின் வாக்குத் திரளாகக் கிடைத்தால் சிறுபான்மையினரின் வாக்குகள் தமது வெற்றிக்குத் தேவைப்படாது. மலையகத் தமிழர்களின் வாக்குகள் கூட வெற்றியை நிச்சயிக்கும் நிலை இருக்காது. சிங்களவர்களுடன் ஒட்டிக் கொண்டிருப்பதாலேயே தம்களுக்குச் சலுகைகள், வசதிகள் சில உரிமைகள் கிடைக்கும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் தென்னிலங்கை முஸ்லிம்களின் வாக்குகள் கூட விஜேதுங்காவின் வெற்றிக்குத் தேவைப்படாமல் போகலாம்.

### பேரரசனாகக் காட்டிக்கொள்ளுதல்

இத்தகைய ஒரு கணக்கினைப் போட்டே, தேற்றத்தை வகுத்தே, விஜேதுங்கா தன்னை சிங்கள-பௌத்தத்தின் ஒரு காவலனாக, அதன் பேரரசனாகக் காட்டிக்கொள்ள முனைகிறார். அதற்கேற்றவாறு பொதுமேடைகளில் பேசி வருகிறார். 1956ஆம் ஆண்டுக் கால இனவெறியையும் தூண்ட முயற்சிக்கிறார். அந்தக் காலத்துக்கு மீண்டுசெல்ல முடிவுசெய்திருக்கிறார்.

ஆகையால் தாம் மீண்டும் ஜனாதிபதியாகும் வரை, தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதனை அவர் மறந்தும் கூட நினைக்க மாட்டார். அப்படி ஏதாவது சிறிதாகச் செய்வதானாலும் தம்மை ஜனாதிபதி பதவியில் நிலைநிறுத்திக் கொண்ட பின்னரே தமிழர் பிரச்சினை ஒன்று உண்டு என்ற ஞாபகம் அவருக்கு வரும். தேர்தல் மயக்கம் பிடித்துள்ள அவர் அது கலையும் வரை தமிழர் பிரச்சினைக்கு — அவர் கூறும் குழுக்குறியில், வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு — இராணுவத் தீர்வே என்ற தனது நிலைப்பாட்டை அணுவளவேனும் மாற்றிக் கொள்ளப் போவதில்லை.

## அந்த இலக்கை அடைவதற்கே சர்வசன வாக்கெடுப்புத் திட்டம்

அவ்வாறெனின் வடக்குக்கு நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் வருவதும் கொழும்பு சென்று அரசாங்கத் தரப்புத் தலைவர்களுடன் பேசுவதும் எல்லாம் பிரச்சினை தீருவதற்கு சிறிதளவேனும் உதவமாட்டாதா? என்ற கேள்வியும்—

கடல் வலயத் தடைச் சட்டத்தை நீக்குவது பற்றி ஆலோசிப்பது வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய வடக்கு மாவட்டங்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்புவது, கிளாலிப் பாதைத் தடையை நீக்க ஆலோசிப்பது என்ற செய்திகளின் பின்னணி என்ன? அவை சம்பந்தப்பட்ட அரசின் போக்கும் நோக்கும் என்ன? என்ற கேள்விகளும்— எழுகின்றன.

அரசாங்கத்துக்கு சமதானத்தில் விருப்பமுண்டு. தமிழ் மக்களை இடுக்கண்பட வைப்பது அரசின் நோக்கமல்ல. வடபகுதிக்கு யாரும் போகலாம். விடுதலைப் புலிகளுடன் பேசலாம். சமாதானக் கதவுகளை நான் இன்னமும் திறந்தே வைத்திருக்கின்றேன்.

— இப்படி ஒரு காட்சியை வெளி உலகத்துக்குக் காட்டுவதற்காகவே அவர் பொய்யான ஒரு புறத்தோற்றத்தைச் சமைக்க முற்படுகிறார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பதின் முதலாவது அம்சம் கிழக்கைச் சிங்களவர் பிரதேசமாக்கி, தமிழர்கள் அதனைத் தமது தாயகத்தின் ஒருபகுதி என்று உரிமை கோராமல் செய்துவிடவேண்டும் என்பதாகும்.

டி. எஸ். சேனநாயக்கா காலத்தில் இருந்தே கிழக்கை தமது பிரதேசமாக்கிவிட வேண்டும் என்ற ஆசை சிங்களவர்களுக்கு இருந்து வருகிறது. அந்த ஆசையைதானே தீர்த்துக் காட்டுவதாக கண்டியச் சிங்களவரான விஜேதுங்கா கங்கணம் கட்டி நிற்கிறார்.

இப்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி கிழக்கை தமதாக்கிக் கொண்டு, அடுத்து வடக்கை ஒரு கை பார்ப்போம் என்பதே டி. பியின் திட்டம். அதற்காகவே அவர் அங்கு இணைப்பை இல்லாமற் செய்வதற்கான சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதற்கு ஒற்றைக் காலில் நிற்கிறார்.

கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலை நடத்திய கையோடு அங்கு சர்வசன வாக்கெடுப்பு நடத்தி இணைப்பை இல்லாமற் செய்யவேண்டும் என்பதே சிங்கள பௌத்த தேசிய வாதத்தின் 'புத்திமதி'. அதனைத் தலைமேல் வைத்துச்

> ஜனாதிபதி தேர்தலில் சுலபமாக வெல்வதற்கு விஜேதுங்கா சிக்கெனப் பிடிப்பது சர்வசன வாக்கெடுப்பையே!

செயற்படுத்தி வெற்றி காண்பதன் மூலம், தாம் இரண்டாவது தட்டமுழுவதாகவேண்டும் என்பது டி. பியின் நோக்கம்.

ஜனாதிபதி தேர்தலில் வெல்வதற்கு பௌத்த சிங்களவரின் வாக்கைப் பெறுவதற்கு அது ஒன்றே போதும்!

இதனைப் இப்பத்தியில் பல தடவைகள் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். கிழக்கை சிங்களவர் வசமாக்கும் திட்டத்தை ஜனாதிபதி தாமத மின்றிச் செயலில் காட்டப் போகிறார் என்பதனை கிழக்குத் தேர்தல் முடிந்த பின்னர் அவர் நிகழ்த்தும் பேச்சுக்கள் உணர்த்துகின்றன.

ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடத்தவேண்டும் என்றநிலை ஏற்படுமானால் அதற்கு முன்னர் கிழக்கை வடக்கிலிருந்து துண்டித்துவிட்டால் வெற்றியும் பதவியும் தமது பக்கமே என்பது டி.பியின் கணக்கு. சகலதும் தமதாகும் என்று பூரணமாக நம்புகிறார்.

அதாவது ஜனாதிபதி தேர்தலில் சுலபமாக வெல்வதற்கு விஜேதுங்கா சிக்கெனப் பிடிப்பது சர்வசன வாக்கெடுப்பையே!

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர்களே நிறைவேற்று ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கு ஏற்றதாக அரசமைப்பில் மாற்றம் கொண்டு வர முடியாத பட்சத்தில் —

ஜே. ஆர். செய்தது போலத் தமது பதவிக் காலத்தை மேலும் ஆறு வருடங்களுக்கு நீடிப்பதற்கான சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த முடியாத பட்சத்தில் —

ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்தப்பட்டு, அதன் மூலமே புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வேண்டிய தேவை ஒன்று உண்டு. அனேகமாக அந்த நிலையே தவிர்க்க முடியாத ஒன்றாகலாம் —

என்பதனை விஜேதுங்காவின் ஆலோசகர்கள் அவருக்குக் கூறி வைத்திருக்கிறார்களாம். இப்போதுள்ள அரசமைப்பு முறையின்படி ஜனாதிபதி தேர்தல் மூலமே புதியவர் தெரிவு செய்யப்படுவதாயின் வடக்கிலும் தேர்தல் நடந்தாக வேண்டும்.

**உதயகாந்தன்**

அதனை மனதிற்கொண்டே தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில், அது சம்பந்தமாகப் பேசுவதில், தமிழர்களுக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

**சூரியகாந்தி**
**உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

# விவசாய உற்பத்திகள் குறித்து தகவல் திரட்டும் பணி ஆரம்பம்

தமிழீழமானது விவசாய உற்பத்தியில் சிறந்து விளங்குவதற்கு அதனது மண் அமைப்பும், காலநிலையுமே காரணமாக அமைகின்றது எனலாம். தமிழீழ மாவட்டங்கள் அனைத்தும் விவசாய உற்பத்தியில் சிறந்து விளங்குகின்றன. இலங்கைத் தீவு மக்களின் பிரதான உணவு தானியமான நெல் உற்பத்தியில் தமிழீழம் தன்னிறைவு கண்டு பல ஆண்டு சென்று விட்டன என்பதுடன் தமிழீழத்திற்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் வளங்களில் ஒன்றாகவும் அது உள்ளதை புள்ளி விவரங்கள் மூலம் அறிய முடிகின்றது.

ஒரு நாட்டினது வளங்கள் தொடர்பான உற்பத்திகளின் புள்ளி விவரங்களைக் கணிப்பீடு செய்வதென்பது பின்வரும் அனுகூலங்களைக் கருத்தில் கொள்வதனாலாகும்.

★ அந்நாட்டினது மொத்த உற்பத்திகளை அறிதல்.

★ முன்னைய ஆண்டுகளோடு ஒப்பீடு செய்து வளர்ச்சி வீதத்தை அறிதல்.

★ மிகையான இடங்களையும், பற்றாக்குறையான இடங்களையும் மதிப்பிடு

**அரிவிருத்தி**

செய்து சந்தை வாய்ப்பை ஏற்படுத்தல்.

★ நாட்டு மக்களின் தேவையோடு ஒப்பீடு செய்து மிகையாயின் ஏற்றுமதிக்கான வழிவகைகளையும் மேற்கொள்ள உதவுதல்.

★ விளைச்சல் குறைந்த இடத்தில் அதற்கான காரணத்தை அறிந்து இயலுமானவரை நிவர்த்தி செய்தல்.

★ பயன்படுத்தப்படாது உள்ள நிலப்பரப்பில் பயன்படுத்தும் வழிவகைகளில் ஈடுபடுதல்.

★ உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் பாதிக்காத நியாயமான விலையினைத் தீர்மானித்தல்.

— இது போன்ற பல்வேறு காரணங்களால் ஆகும்.

### சுயசார்பு பொருளாதாரம்

இதேவேளையில் சிங்கள அரசினால் இன்று தமிழீழ மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார ரீதியான அழுத்தங்களை வென்றெடுப்பதற்காக முழு முச்சாக உற்பத்தியில் ஈடுபட வேண்டியது ஒவ்வொரு தமிழீழ குடிமகனினதும் தலையாய கடமையாகும். இந்நெருக்கடியிலிருந்து நாம் மீள்வதற்கு எமது பொருளாதாரத்தை சுயசார்புப் பொருளாதாரமாக்க வேண்டியது ஆவசியம் உருவாகியுள்ளது.

## ஒத்துழைப்பு வழங்கும்படி விவசாயிகளிடம் கோரிக்கை

அதேவேளை எமது மண்ணின் வளங்களை மூலப் பொருள்களாகக் கொண்டு, உற்பத்திகளைப் பெருக்கி, எமது உணவுத் தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

### விவசாய நிலங்களை இழந்தோம்

கடந்த காலங்களில் நல்ல வளம் நிறைந்த செம்மண் பிரதேசங்களை வீடுகள், கடைகள், கல்லூரிகள் ஆகியவற்றைக் கட்டிக் கொள்வதற்கும் மற்றும் பிற தேவைகளுக்கும் பயன்படுத்தியதனால், பயிர்ச் செய்கைக்கேற்ற நல் விவசாய நிலங்களை இழந்துள்ளோம்; சரியான முறையில் திட்டமிடாத செயற்பாட்டினாலேயே இவ்விதம் நேர்ந்திருக்கின்றது.

எனவே இனிவரும் காலங்களிலாவது இவ்வாறான முன்யோசனை எதுவுமற்ற திட்டங்களை முற்றாகத் தவிர்க்க வேண்டும். விவசாயச் செய்கைக்கேற்ற விவசாய நிலங்களைப் பிரத்தியேகமாகப் பேணி அதோடு பாதுகாக்க வேண்டிய தலையாய கடமை நமக்குரியது. மேட்டு நிலப் பயிர்களுக்குரிய பிரதேசங்களும், நெற்பயிர்க் காணிகளும் இனங்கண்டறியப்படுவதுடன் ஏதாவது காரணங்களுக்காக அவை உபயோகிக்கப்படாமலிருந்தால் அவை நிவர்த்தி செய்யப்பட்டு அப்பகுதி உடனடியாகப் பயிர்ச்செய்கைக்கு உள்ளடக்கப்படல் வேண்டும்.

### புள்ளி விவரம் திரட்டப்படுகிறது

இதன் அடிப்படையில் திட்டமிட்ட உணவு உற்பத்தியை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய தகவல்களை திரட்டும் ஒரு நடவடிக்கையாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புள்ளி விவரக் கிளையினால் 93 / 94 காலபோக நெற்பயிர், மேட்டுநிலப்பயிர்ச் செய்கை விவரங்கள் வடதமிழீழத்தில் திரட்டும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மேலும் 92/93 காலபோகத்தில் திரட்டப்பட்ட நெற்செய்கை தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பெருநிலப்பரப்பில் இப்போகத்தில் நெல் விளைச்சலை மதிப்பிடும் முகமாக அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் அளவீடுகள் மேற்கொள்ளப்படும் காணிகளின் செய்கையாளர்களிடம் இருந்து நெல் உற்பத்திச் செலவு விவரங்கள் திரட்டப்படவும் உள்ளன.

இந்த அளவீட்டிலே பெறப்படும் விவரங்களைக் கொண்டு புள்ளி விபர ரீதியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எமது பிரதேசத்திற்குமான விளைச்சல் மதிப்பிடப்படும்.

இவ் அளவீட்டை சரியான முறையில் செய்வதற்கு செய்கையாளர்கள் தங்கள் முழு ஒத்துழைப்பையும் கொடுப்பது மிகவும் அவசியமாகும். இவ்வளவீட்டை சரியாகச் செய்யாவிடின் அது எமது மக்களையும் செய்கையாளர்களையும் பாதிக்கும்.

உதாரணமாக விளைச்சல் கூடுதலாக இருந்தும் தவறுகள் காரணமாக இந்த அளவீட்டில் குறைந்த விளைச்சலை கணிப்போமானால் எமது தேவைக்கு மேலதிகமான வெளி இடங்களில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டி இருக்கும். உண்மையில் விளைச்சல் கூடுதலாக இருக்கும் போது மேலதிக அரிசியை இறக்குமதி செய்வதினால் அரிசி தேக்கமடையும்; அரிசியின் விலை குறையும். இதனால் நெற் செய்கையாளர்கள் பாதிக்கப்படுவார்.

இது போன்று உண்மையில் விளைச்சல் குறைவாக இருக்கும்போது அளவீட்டின்படி விளைச்சலைக் கூடுதலாக — பிழையாக — கணிப்போமானால் அரிசித் தேவையைக் கணிக்கும்போது எமது தேவைக்கு நெல் விளைச்சல் போதுமென்று கருதி மேலதிகமான அரிசி இறக்குமதி செய்யப்படமாட்டாது. இதன் காரணமாக அரிசிப் பற்றாக்குறை ஏற்படுவதுடன், விலை ஏற்றமும் ஏற்படும். இதனால் மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

இவ்வாறே இதர மேட்டு நிலப் பயிர்கள் தொடர்பான தரவுகள் பிழையாக இருப்பினும், விவசாயிகளும் நுகர்வோரும் பாதிக்கப்படுவது தவிர்க்கப்பட முடியாதது ஒன்றாகிவிடும்.

இந்த நிலை ஏற்படாதிருக்கவும்.

விவசாயிகளையும், நுகர்வோரையும் பாதிக்காத வகையில் திட்டமிடுவதற்கும் —

ஒவ்வொரு செய்கையாளரும் அவ்வப்பகுதி தரவு சேகரிப்பாளருக்கு உண்மையானதும், சரியானதுமான தரவுகளைக் கொடுத்து ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புள்ளி விவரக் கிளையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தகவல்:
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

## ஆப்கானில் அதிகாரப்..

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிற்கிறார்கள்.

### சோவியத் தலையீடு

ஆப்கானிஸ்தான் கம்யூனிஸ்ட் அரசுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக 1979 ஆம் ஆண்டு சோவியத் யூனியன் தனது படைகளை ஆப்கானிஸ்தானுக்குள் அனுப்பியது.

1992 ஆம் ஆண்டு சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறும் வரை அதாவது சுமார் 14 வருடகாலம் நடத்தப்பட்ட "ஜிஹாத்" என்று அழைக்கப்பட்ட புனித தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது தாஜிக் இனத்தவர்களும், பட்டாணியர்களும் மட்டும் அல்ல ஆப்கானிஸ்தானின் சகல இனத்தவர்களுமே ஒன்றுபட்டிருந்தார்கள்.

முஜாஹிடீன் (Mujahideen) என்ற கெரில்லா இயக்கத்தை நிறுவி பெரும் அளவில் சோவியத் எதிர்ப்பு யுத்தத்தை நடத்தினார்கள். இவர்கள் நடத்திய போராட்டத்தின் போது சோவியத் யூனியன் தனது படையில் 15 ஆயிரம் வீரர்களை இழந்தது.

சோவியத் யூனியன் தற்போது சிதறுண்டு போனதற்கு ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகளின் தலையீடும் ஒரு காரணம் என்று நம்பப்படுகிறது.

சோவியத் படைகளுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தின் போது அமெரிக்காவும், அரபு நாடுகளும் பலகோடி டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களை முஜாஹிடீன் கெரில்லாக்களுக்கு அள்ளி வழங்கின.

சோவியத் படைகளுக்கு எதிரான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்திலேயே இந்த ஆயுதங்களைப் பெருமளவில் சேகரித்து இனரீதியாகத் தம்மைப் பலப்படுத்தும் முயற்சியில் ஆப்கானிஸ்தானியர் ஈடுபட்டிருந்தனர்.

நஜிபுல்லா ஆட்சி கவிழ்க்கப்பட்டு 1992 ஆம் ஆண்டு ஏப்ரலில் தலைநகர் காபூலுக்குள் முஜாஹிதீன் படைகள் நுழைந்த போது, எவர் ஆட்சியைக் கைப்பற்றுவது என்பதில் அதிகாரப்போட்டி ஏற்பட்டது.

ஏப்ரல் 17 ஆம் திகதி ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டு சகல இனத்தவர்களுக்கும் அதிகாரப் பங்கீடு செய்யப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் தாஜிக் இனத்தவரான ரபானி ஜனாதிபதியானார்.

ஜனாதிபதி பதவிக்கு கண் வைத்திருந்த பட்டாணியரான ஹெக்மத்யாருக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டது.

சோவியத் படைகளுக்கு எதிராக வெற்றிகரமாகப் பெரும் தாக்குதல்களை நடத்தி இருந்த அஹ்மட்ஷா மசூட் பாதுகாப்பு அமைச்சரானார், இவரும் தாஜிக் இனத்தவரே.

வடக்கே உஸ்பெக்கிஸ்தான் எல்லையை அடுத்துள்ள பகுதி டொஸ்ரமின் அதிகாரத்தின் கீழ் விடப்பட்டது.

தற்போதைய அதிகாரப் போராட்டத்தில் ஜனாதிபதி ரபானிக்கு எதிராக ஹெக்மத்யாரும், டொஸ்ரமும் இணைந்துவிட்டனர். ஜனாதிபதி பதவியை கைப்பற்றுவதே ஹெக்மத்யாரின் நோக்கம்.

### ஐ.நா. தலையீடு

தற்போதைய யுத்தத்துக்கு முடிவு காண்பதற்கான வழிமுறைகள் பற்றி அமெரிக்காவும் ஐக்கிய நாடுகள் சபையும் ஆலோசித்து வருகின்றன.

கம்போடியாவில் செய்து கொள்ளப்பட்டது போன்று யுத்த நிறுத்தமும் தேர்தலும் உடனடியாகச் சாத்தியமற்றது என்றே கருதப்படுகிறது.

கம்போடியாவில் நான்கு இயக்கங்களை அரசியல் நீரோட்டத்துக்கு கொண்டு வந்து தேர்தல் ஒன்றுக்கு ஆயத்தம் செய்ய ஐ. நா. 18 மாதங்கள் செலவிட்டது. ஐ. நா. சரித்திரத்திலே முன் எப்போதும் இல்லாதவாறு 22 ஆயிரம் ஐ. நா. அதிகாரிகள் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டனர்.

கம்போடியாவுடன் ஆப்கானிஸ்தானை ஒப்பிடும் போது ஐ. நா. வின் தலையீடும் சமரச முயற்சிகளும் வெகு தூரத்திலேயே உள்ளன.

- சஞ்சாரன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான்
# ஆங்கில மருத்துவ சேவை

14-3-94 முதல் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (டாக்டர் சண்முகலிங்கம் வீட்டிற்கு சற்று முன்பாக) என்ற முகவரியில் மேற்படி சேவை இரு நேரமும் இயங்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்,
**பகவான் மருந்தகம்,**
221, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7540)


# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி ஜெபிச்சந்திரன் (ஜெபி)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கஸ்தூரியார் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி ஜெபிச்சந்திரன் (ஜெபி) (அருண் பிரிண்டேர்ஸ்) 11-03-94 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தசாமி, தையல்நாயகி (அழகு) தம்பதிகளின் அன்பு மகனும், பிரேமச்சந்திரன், ஜெயச்சந்திரன் (கனடா), ஞானச்சந்திரன் (நோர்வே), பாலச்சந்திரன், இராமச்சந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற தேவச்சந்திரன், ஜீவச்சந்திரன் (ஜேர்மனி), புனிச்சந்திரன் (ஜேர்மனி), செல்வச்சந்திரன் ஆகியோரின் அருமைச் சகோதரனும், லங்காதேவி, குணவதி (கனடா), சுகந்தி (நோர்வே), புஸ்பரஞ்சனா, ராகினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வசந்தனா, சந்திரகலா, பிரபாகர், வத்சலா, ஹரன், ஜெயரதன், சதீஸ், நிவேதன், நிவேதன், (கனடா), நிருபன் (நோர்வே), சுதர்சன், சிந்துஜா (ஜேர்மனி) ஆகியோரின் அருமைச் சித்தப்பாவும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (13-03-94) காலை 10 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
க. பிறேமச்சந்திரன்
(சந்திரன்)
(சகோதரன்)

211/1, (519/3) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (29878)

## கனகராசா விஜயலட்சுமி (விஜயம்)

(கொக்குவில்)

காரைநகர் களபூமி சத்திரந்தையை பிறப்பிடமாகக் கொண்டவரும் பொற்பதிறோட் கொக்குவில் கிழக்கினைச் சேர்ந்தவருமான கனகராசா விஜயலட்சுமி காலமானார்.

இவர் காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னம்பலம் சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகளும் கொக்குவிலைச் சேர்ந்த கந்தப்பிள்ளை நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் கனகராசாவின் அன்பு மனைவியும், சாந்தகௌரி (கொழும்பு), சாந்தசொரூபன் (கனடா), சாந்தபவான் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் சிறீஸ்கந்தராசா, றஞ்சனி, நந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிறீஜனன், அனோஜன், வித்தியா ஆகியோரின் அன்புப பேர்த்தியும், V P தியாகராசா (ஓய்வுபெற்ற இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபன அறிவிப்பாளர்), பராசக்தி (காரைநகர், களுங்காலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பரராஜசிங்கம் (C.G R) சந்திரசேகரம் (அவுஸ்திரேலியா), கோபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13-3-94) காலை 9 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்
க. கனகராசா
(கணவர்)

பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (29874)

## சுவாம்பிள்ளை மேரி யோசவ்

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் 83/1, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் தற்போது வசித்து வந்தவரும், இளைப்பாறிய ஆசிரியருமாகிய சுவாம்பிள்ளை மேரி யோசவ் அவர்கள் 10-3 94 இல் காலமானார்.

அன்னார் ஞானமணியின் அன்புக் கணவரும் மதுரம் (லண்டன்), ராணி (சச்சமோட்டை), அருட்சகோதரி ஸான்ட்றா A C. (பரியோவான் கல்லூரி, ஆசிரியை), அன்ரன் தவராஜா (லண்டன்), யோகா (லண்டன்), றொபேட் புவிராஜ் (கணக்காளர், வடக்கு — கிழக்கு கல்வித் திணைக்களம், திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், செபஸ்ரியன் ராஜேந்திரம், அன்ரனற் றஜனி, C. S கிறிஸ்தோப்பர் (லண்டன்), பீற்றர்ஸன் விஜயசிங்கம் (நிர்வாகி, ஷம்றொக் அக்கடமி), யசோதா (ஸ்ரீசண்முக வித்தியாலயம், திருகோணமலை) ஆகியோரின் பாசமுள்ள மாமனாரும், தயான், சிந்தியா, டிலானி, றொஷானி, ரஜனிஸ், றமணி, றதினி, ஜோ ஆகியோரின் நேசம் நிறைந்த பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் இன்று 13-3 94 பிற்பகல் 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டபின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்;
பீற்றர்ஸன் விஜயசிங்கம்
(மருமகன்)

83/1, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (29888)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13-03 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## மாணவர் அறிவியல் கழக பொது நூலகம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மாணவர் அறிவியல் கழகத்தின் பொது நூலகம் அதன் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது நூல் இரவல் வழங்கும்பகுதியின் முழுமையான செயற்பாடு நாளை திங்கட்கிழமை முதல் நடைபெறும். (க)

## பண்டிதமணி நினைவு தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் எட்டாவது நினைவு தினம் இன்று 13 ஆம் திகதி ஆகும் அவரது 95 ஆவது பிறந்த தினம் ஜூன் மாதம் 27 ஆம் திகதி ஆகும்.

பண்டிதமணியின் பிறந்த தின, நினைவுதின நிகழ்வுகளை ஒட்டிய பேச்சுப்போட்டி கட்டுரைப் போட்டி முதலியன இவ்வாண்டும் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது. [க]

## அரசியலில் ஈடுபட ஜே.வி.பி. முயற்சி

கொழும்பு மார்ச் 13

ஜே. வி. பி. அமைப்பு இலங்கை அரசியலில் மீண்டும் பிரவேசிப்பதற்கு ஏதுவான பின்னணியைத் தயாரிக்கும் பொறுப்பை இலங்கை முற்போக்கு முன்னணி ஏற்று கொண்டிருப்பதாக இம்முன்னணியின் தலைவர் ஆரிய புலேகொட தெரிவித்திருக்கிறார்.

ஜே. வி. பி. இயக்கம் இலங்கை அரசியலில் ஈடுபடுவதற்கு வாய்ப்பளிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி வெளிநாட்டில் இருக்கும் ஜே வி.பி. இயக்கத் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கா தமக்குக் கடிதம் எழுதியிருப்பதாக பி.பி.ஸி. சந்தேசயவுக்கு அளித்த பேட்டியில் திரு. புலேகொட தெரிவித்துள்ளார். (இ-எ-6)

## அறிவியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 13

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் அறிவியல் கழகம் நடத்தும் அறிவியல் கருத்தரங்கு தொடர் — 1 16 ஆம் திகதி மாலை 4 மணிக்கு அறிவியல் கழக மண்டபத்தில் நடைபெறும்.

''அறிவியல் பாடங்களைக் கற்பதில் தமிழீழ மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தாண்ட வேண்டிய தடைகளும்'' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக் கழக பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு ப. சிவநாதன் கருத்துரை வழங்குவார். (க)

## 2 தமிழர் கைது

கொழும்பு, மார்ச். 13

தேசிய அடையாள அட்டைகளை கள்ளத்தனமாக அச்சிட்டதாகக் கூறப்படும் இரு தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருப்பதாக கொழும்பு முகத்துவாரம் பொலீஸார் தெரிவித்தனர். (இ-எ-6)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ் மாவட்ட உலர்வலய அபிவிருத்தி மன்றத்தினால் 1993/1994 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த விவசாய உதவித் திட்டத்தின் கீழ் நெற்பயிர்ச் செய்கைக்கு உதவி வழங்கப்பட்ட விவசாயப்பயனாளிகளில் சிறந்த நெற் செய்கை விவசாயப்பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளை கௌரவிக்கும் முகமாக மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நாளை திங்கட்கிழமை காலை 10-00 மணியளவில் பரிசளிப்பு விழா நடைபெறவுள்ளது. (க)

## புகலிடம் கோருவோர் பிரிட்டனில் உண்ணாவிரதம்

லண்டன், மார்ச். 13

பிரிட்டனில் தடுப்பு நிலையம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கு அதிகமான புகலிடம் கோருவோர் தாம் கைதிகள் போன்று நடத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உண்ணாவிரதம் இருந்து வருவதாக அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆசிய, ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த 180 க்கும் அதிகமானவர்கள் ஒக்ஸ்போர்ட் நகருக்கு அருகில் உள்ள தடுப்பு நிலையத்தில் காலவரையறையற்ற உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

புகலிடம் கோரி பிரிட்டனில் உள்ள சுமார் 50 ஆயிரம் பேரின் நிலையை பிரிட்டிஷ் அதிகாரிகள் தற்சமயம் பரிசீலனை செய்து வருகின்றார்கள்.

அறுநூறு பேர் வரையில் தடுப்பு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## பெற்றோரிடம்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காணிப்பு பிரிவு இவ்வாறு அறிவித்துள்ளது

ஏற்கனவே பிள்ளைகளின் சொத்துக்களுக்கு பெற்றோரிடம் தவறுதலாக வாடகைப்பணம் அறவிடப்பட்டமைக்கு வடபகுதிக்கு வெளியே செல்வோரின் சொத்துக்கள் கண்காணிப்புப் பிரிவு வருத்தம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான வீடுகள், வீட்டுச் சொத்துக்களுக்கு வாடகைப் பணம் செலுத்திவருவோர் தமது கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கலாம் என்றும்—

அந்தக் கோரிக்கைகள் உண்மை எனக் காணுமிடத்து அவர்களிடமிருந்து வாடகைப் பணம் பெறப்படுவது ரத்துச் செய்யப்படும் என்றும்—

கோண்டாவிலில் அமைந்துள்ள வடபகுதிக்கு வெளியே செல்வோரின் சொத்துக்கள் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் வாரம்தோறும் வியாழக்கிழமைகளில் பொறுப்பாளரை சந்தித்து இது தொடர்பான கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கலாம் என்றும் — மேற்படி கண்காணிப்புப் பிரிவினர் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது (அ-5)

## கிழக்கில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக பி.பி.ஸி செய்தியாளர் உட்பட பலரும் தகவல் வெளியிட்டிருந்தனர்.

சர்வசன வாக்கெடுப்பு ஒருபோதும் இனப் பிரச்சினையைத் தீர்க்கமாட்டாது என்றும் மாறாகத் தமிழர்களினதும் அவர்களின் போராளிகளினதும் மனத்தைப் புண்படுத்தலாம். ஆத்திரமூட்டலாம் என்று அரச தரப்பில் ஒரு பகுதியினர் கருதுகின்றனர் எனவும் கூறப்பட்டது.

எனினும் அவர்களின் கருத்தைப் புறக்கணித்து சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று ஜனாதிபதி அறிவித்துவிட்டார். (அ-த)

## கிழக்கைச் சிங்களவர்களின்..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்திய சஞ்சிகைகளை, இன்னல்களை நீக்குவதில், தனக்கு அக்கறை இருப்பதாகக் காட்டிக்கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்ட (Arranged) அறிவிப்புகள் வருகின்றன.

ஒளலித் தடையை நீக்குவதிலும், வடக்கே பொருள்களை அனுப்புவதிலும் அக்கறை இருப்பதாக காட்டிக்கொள்வதும் பேச்சுக்களில் ஆர்வம் இருப்பதாகக் காட்டிக்கொள்வதும் அந்த வகையினவையே.

நல்லெண்ணத் தூதுக்குழுக்கள், பேச்சுவார்த்தைக்கு விருப்பம் என்பதில் இன்னொரு நோக்கமும் உண்டு.

தமிழர் பிரச்சினையில் வெளிநாட்டு மத்தியஸ்தம், ஐ. நா. மத்தியஸ்தம் என்ற அழுத்தம் இன்னும் பெரிதாக வரவில்லையாயினும், அதற்கான அரும்புதல்கள் ஆங்காங்கே தெரிகின்றன. எனவே அவற்றை முறியடித்து முற்றுப்புள்ளி வைப்பதற்கு சமரசத்துக்கும் சமாதானத்துக்கும் தான் தயார் என்று காட்டிக்கொள்வதே அந்த இரண்டாவது நோக்கம்!

கனடா நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் மத்தியஸ்த முயற்சி தேவையில்லை என்று அமைச்சர் தொண்டமானுக்கு அறிவுறுத்தியதும், சுவீடிஷ் குழுவின் மத்தியஸ்த முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டதும் மூன்றாமவர் பங்களிப்பை விஜேதுங்கா விரும்பவில்லை என்பதனையே தெளிவுபடுத்துகின்றன. வடக்கு - கிழக்குப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை என்றும் அதனைத் தீர்க்க வெளியார் தலையீடு தேவையில்லை என்றும் அவர் தொடர்ச்சியாக நிராகரித்து வருகிறார்.

அவ்வாறு முட்டுக்கட்டை போடும் போது [illegible]

தத்தில் சமாதானத்துக்கும், பேச்சுக்கும் முயற்சிப்பதாகக் காட்டிக் கொள்ளும் தேவை அவசியமாகிறதல்லவா?

இல்லையேல் வெளிநாடுகள், ''நீயும் தீர்ப்பதாக இல்லை, அதற்கு உதவ எங்களையும் அனுமதிப்பதாக இல்லை எனில் அர்த்தம் என்ன?'' என்று கேட்டுத் தலையில் குட்டும் நிலை உருவாகலாம் என்ற அச்சமும் உள்ளூர இருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலை வடக்கிலும் நடத்தும் தேவை உருவாகும்போது இங்கு சமாதானச் சூழ்நிலையை உருவாக்கவேண்டும் அல்லவா?

அதனால் தான் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருக்குமாறு சர்வோதயத் தலைவர் ஆரியரத்தினாவிடம் கூறி வைத்திருக்கிறார். ஆபத்துக்கு, ஆகக் கடைசிக் கட்டத்தில் அதனையாவது ஒரு துரும்பாகப் பற்றிக் கொண்டு நீந்தித் தப்பலாம்— ஜனாதிபதித் தேர்தலில் வெல்லலாம்— என்ற எண்ணம் போலும்!

இந்த வகையில், மேலே கூறிய பொய்த் தோற்றத்தை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் —

அரசமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தைத் தக்கவாறு பயன்படுத்தி மாகாண சபைகளுக்கு மேலும் அதிகாரங்களை வழங்கும் சாத்தியம் குறித்து ஆராயுமாறு விஜேதுங்கா தனது சட்ட ஆலோசகர்களைக் கேட்டிருப்பதாகவும் ஒரு தகவல் உண்டு

இப்போதுள்ள ஒன்பது மாகாணங்களையும் நான்காகக் குறைத்து அங்கு நிறுவப்படும் சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கலாம் என்ற திட்டம் ஒன்று குறித்து [illegible] கள் வெளியாகி உள்ளன. [illegible]

அல்லது இட்டம் சட்டமா அதிபர் திலக் மாரப்பனவினால் வரையப்பட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது.

ஜனாதிபதி விஜேதுங்கா இதுவரை காலமும் தமக்கு வேண்டிய சட்ட ஆலோசனைகளை முழுக்க முழுக்க அமைச்சர் சொக்ஸியிடம் இருந்தே பெற்று வந்தார் என்றும் ஆனால் இப்போது திலக் மாரப்பனவிடமே முக்கிய விடயங்களுக்கு சட்ட ஆலோசனை பெறுவதாகவும் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் தனக்கு ஆர்வம் இருப்பதாக இவ்வாறாக எல்லாம் ஜனாதிபதி காட்டிக்கொள்வது ஓர் பிரசார நோக்கமே அன்றி வேறு எதுவும் அல்ல.

ஒளலியை திறப்பது, கடல் வலயத் தடைச் சட்டத்தை நீக்குவது, சமாதானம், பேச்சு என்பதெல்லாம் பிரசாரப் பொய் முகமே!

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அரசுக்கு உண்மையான அக்கறை இல்லை; வெறும் பிரசார தந்திரமே என்பதற்கு ஓர்சிறு உதாரணம்.

தென் மாகாண சபைத் தேர்தலுக்காக ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதி விஜேதுங்காவின் பெரிய அளவிலான படம் ஒன்றை அச்சிட்டுள்ளது. அந்தப் படத்தின் கீழ் உள்ள வாசகம்:

''எனது வாழ்க்கையில் ஒரு போதும் ஈழம் கொடுக்க மாட்டேன்''

விஜேதுங்காவின் அண்மைக்கால இனவாதப் பேச்சுகளுக்கு சிங்களவர்களின் வரவேற்பு எப்படி இருக்கிறது என்பதனை அறிவதற்கான ஒரு பரீட்சையாகவும் இந்தச் சுவரொட்டி அமையலாம் அல்லவா? ★

## தீப்பிடித்த..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாலை 5 மணி இருக்கும் கடலில் சென்று தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோம் அப்போது எம்முடன் மற்றும் 5 படகுகள் தொழிலில் ஈடுபட்டிருந்தன.

காலை சுமார் 7மணியிருக்கும் காங்கேசன்துறைப் பக்கமிருந்து கடற்படையினரின் டோரா படகொன்று எமது பக்கமாக வந்து கொண்டிருந்தது.

அவ்வேளை கொழும்பில் இருந்து ஒரு கப்பல் (துறைமுகத்தை நோக்கிச்சென்றுகொண்டிருந்தது.

கடற்படையினரின் படகு அக்கப்பலையும் விலத்திக் கொண்டு எம்மை நோக்கி வந்தது அப்போது எம்முடன் தொழிலில் ஈடுபட்டிருந்த மற்றைய படகுகள் கரையைநோக்கி விரைந்தன நாமும் புறப்பட ஆயத்தமானோம் அப்போது எம்மைநோக்கி கடற்படையினர் திடீரென 50 கலிபர் தாக்குதலை மேற்கொள்ள என்னுடன் கூடஇருந்தவர் படகினுள் வீழ்ந்தார். நானும் உள்ளே படுத்துக்கொண்டேன்.

வேதனையால் முனகிக்கொண்டிருந்த அவரை நிமிர்ந்து பார்த்தேன் அவரது கழுத்தில் இருந்து இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. அதைப்பார்த்து நிமிர்வதற்குள் கடற்படையினரின் படகு எம் படகை நெருங்கிவந்துவிட்டது.

எமது படகினுள் ஏதோ ஒரு வெள்ளை நிறத் தூளை படையினர் தூவினர் மறுகணம் படபடவென்று துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. படகு குபீரெனப் பற்றிஎரிந்தது.

என் மீதும் தீப்பிடித்துக் கொண்டது நான் தீப்பிடித்த நிலையில் கடலில் பாய்ந்தேன் அப்போது கடற்படையினரின் 'டோரா'' படகு அங்கிருந்து நகர்ந்து சென்று கொண்டிருந்தது.

நான் எரிகாயங்களுடன் நீந்த முடியாது கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரத்தில் எமக்கு உதவியாக ஒரு படகு வந்தது. படகில் வந்தவர்கள் என்னைத் தூக்கி தமது படகில் போட்டனர் எரிந்து கொண்டிருந்த எமது படகை கட்டி இழுத்துக் கரை சேர்த்தனர். எரிந்த படகுக்குள் தம்பியின் சடலம் கருகிய நிலையில் மீட்கப்பட்டது.

இப்படி அவர் தெரிவித்தார். [இ-173-15]


# சிறந்த இனக் காளைகள் விற்பனைக்கு

சினைப்படுத்தலுக்கு பயன்படுத்தக்கூடிய சிறந்த இனக் காளைகளும் (பேர்சிக் கலப்பு 75%) வளர்கன்றுகளும் விற்பனைக்குண்டு 16-03-1994 புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு கீழ்க்காணும் முகவரியில் கூறு விற்பனை நடைபெறும்.

இடம்- ''அன்பு பண்ணை''
கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (சி/7547)


# கண்ணீர் அஞ்சலி



## கந்தசாமி ஜெபிச்சந்திரன்

(அச்சக மேற்பார்வையாளர்.
அருண் பிரிண்டேர்ஸ்)

எங்கள் நிறுவனத்தில் பணி புரிந்த சில மாதங்களில் எல்லோருடனும் அன்புடனும், பண்புடனும் பழகி, கடமையைக் கண்ணாகக் கருதி உழைத்த பாங்கினை நினைவு கூர்ந்து கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவோர்.

பணியாளர்கள்,
உதயன் நிறுவனம்.

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு: 13 — 10 — 1968



இறப்பு: 11 — 03 — 1994

## கந்தசாமி ஜெபிச்சந்திரன்

விதியது என்பது வலியதுவாக
மதியதை மறைந்த கொடுமையினால்.
வெறியாய் வந்த கால தேவனின் அழைப்பதை
விதியாய்க்காண நேர்ந்த முடிவிதுவோ.

மரும் வயதினில் வான்வீடு சென்றனையோ
மண்ணுலகில் நேசித்தோம் விண்ணுலகில்
மறவோம்.

நண்பர்கள்,
சிறி அமலா ஜுவல்லர்ஸ்,

(சி/7546)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org